Regd No. TN/TJ/17.

தமிழ் வாழ்க

தமிழ்ப்பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

எண் :

திரு. .... அவர்கள்

மா.5. ஆசிரியர்,
தஞ்சை சரபோசி மன்னர் சரசுவ,
மகால் நூல்நிலையம்,
அரண்மனை, தஞ்சாவூர்.1

கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர்-613 002.

விற்பனைக்குக் கிடைக்கும் நூல்கள்

தெல்லை வருக்கக் கோவை	0—12
சித்தாந்தாதி	0—12
சுருதி வீணை	0—25
கவியரசு நினைவுமலர்	1—00
சிவமும் செந்தமிழும்	0—25
Garland of Tamil Poetry	2—00
கச்சிக் கலம்பகம்—(பூண்டி அரங்கநாத முதலியார்)	0—50
தமிழரசி குறவஞ்சி	0—62
யாழ் நூல்—சுவாமி விபுலானந்தர்	50—00
கட்டுரைப்பொழில் (மணிவிழா மலர்)	30—00
மெய்ஞ்ஞானத்தின்—கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு (இரண்டாம் பதிப்பு)	2—00
நக்கீரர்—ந. மு. வேங்கடசாமி நாட்டார் (இரண்டாம் பதிப்பு)	3—00
கபிலர் ,, ,,	4—00
பிற வெளியீடுகள் :	
கலைக்கூத்தன் கவிதைகள்	6—00

வெளியிடுபவர் : திரு. ச. இராமநாதன், தலைவர், கரந்தைத் தமிழ்ச்சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.
அச்சிடுபவர் : திரு. M. சந்திரமௌலி,
ஜெமினி அச்சகம், 1837/1, மேல ராஜ வீதி, தஞ்சாவூர்-613 009.

தமிழ் வாழ்க

தமிழ்ப்பொழில்

திங்களிதழ்

துணர் : 58 மலர் . 4

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தொண்டு தமிழ் முன்னேற்றம்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

திருவள்ளுவர் யாண்டு: 2015—இரத்தாட்சி ஆடி
(1984 சூலை — ஆகஸ்ட்)

MALLIKA ARTS

பொழிற்றொண்டர் :
ச. பாலசுந்தரம்

தமிழ்ப் பொழில்

துணர் : 58 ⋮ **உள்ளுறை** ⋮ மலர் : 4

1. **பாட்டியல் கூறும் கணப் பொருத்தம் பைந்தமிழுக்குப் பொருந்துமா ?** 201
திரு. அடிகளாசிரியன்,
இணைநிலைப் பேராசிரியர்,
சுவடிப்புலம், தமிழ்ப் பல்கலைக் கழகம்.

2. **திருக்கற்றளிப் பரமேசுவரர் கோயில் கல்வெட்டுகள்** 208
(சென்ற இதழ் தொடர்ச்சி)

3. **குயில் பாடும் பாட்டு** 209
K. சோமசுந்தரம், B.A., B.L.,
தஞ்சை.

4. **கன்னொடு சிவனும் அவ்வியற் பெயர்** 217
டாக்டர். ஏ. ஆதித்தன்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

5. **தமிழில் பின்னிணைகள்** 222
டாக்டர். மோ. இசரயேல்,
பேராசிரியர் & தலைவர், மொழியியல் துறை,
மதுரை - 625 021.

6. **ஆஸ்மா என்ற ஈளை நோய்** 228
டாக்டர். சு. நரேந்திரன், எம்.எல்.,
தஞ்சை.

7. **முத்தி நெறி** 231
டாக்டர். மொ. அ. துரை அரங்கசாமி,
எம்.ஏ., எம்.ஓ.எல்., பி.எச்.டி.

தமிழ் வாழ்க

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

துணர் : 58	திருவள்ளுவர் யாண்டு — 2015 இரத்தாட்சி — ஆடி சூலை — ஆகஸ்ட் 1984	மலர் : 4

பாட்டியல் கூறும் கணப் பொருத்தம் பைந்தமிழுக்கு பொருந்துமா ?

திரு. அடிகளாசிரியன்

தோற்றுவாய்

"பல மொழிகளில் வழங்கும் பயன்படும் செய்திகளைத் தமிழ் மொழிக்குக் கொண்டு வந்து சேர்த்தல், தமிழறிஞர் தமிழ்மொழிக்குச் செய்யும் நல்ல தொண்டாகும். ஆனால், பயன்படாதவற்றைக் கொண்டுவத்து குவிப்பதும், பிழையான செய்திகளைக் கொண்டு வந்து சேர்ப்பதும், தமிழ் மொழிக்குச் செய்யும் நல்ல தொண்டாகா என்பது என் கருத்து. அதற்கொரு எடுத்துக்காட்டான செய்தியை இக்கட்டுரையில் கூறுகிறேன்.

பாட்டியல் பகர்வது

பன்னிருப்பாட்டியல் என்னும் நூல், எழுத்தியல், சொல்லியல், இனவியல் என மூன்று இயல்களை உடையது. அந்நூலில் சொல்லியலில் *சீர்க்கணம் என்ற தலைப்பு, சீருக்குரியனவாகிய கணங்களைப் பற்றிக் கூறுகிறது.

தமிழ் யாப்பிலக்கணத்தில் ஈரசை, மூவசை, நான்கசை ஓரசையென நான்குவகைச் சீர்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள்ள ஈரசை, நான்கசை, ஓரசைகளை ஒழித்துவிட்டு, மூவசைச் சீர்க்கே கணம் கூறப்படுகின்றது (54, 56) கணமே மூவசைக் கூட்டமாகும், என்பது கபிலர் நூற்பா.

நற்கணம்

மூவசைச்சீர்களில், நேர் நேர் நேர் என்னும் மூன்றசையினால் அமைந்த சீர் இயமான கணமாகிய நற்கணம் ஆகும். (58)

நிரை நேர் நேர் என்னும் மூன்றசையினால் அமைந்த சீர் திங்கள் கணமாகிய நற்கணம் ஆகும். (59)

நிரை நிரை நிரை என்னும் மூன்றசையினால் அமைந்த சீர் நிலக்கணமாகிய நற்கணமாகும். (60)

நேர் நிரை நிரை என்னும் மூன்றசையினால் அமைந்த சீர் நீர்க்கணமாகிய நற்கணம் ஆகும். (61)

தீக்கணம்

மூவசைச் சீர்களில் நேர் நிரை நேர் கதிர்கணமாகிய தீக்கணம் (62)

'நிரை நிரை நேர்' வரின் ஆகாய கணமாகிய தீக்கணம் (63)

'நிரை நேர் நிரை' வரின் நெருப்பின் கணமாகிய தீக்கணம் (64)

'நேர் நேர் நிரை' வரின் காற்றின் கணமாகிய தீக்கணம் ஆகும். (65)

மூவசைச் சீர்கள் நற்கணம் என்றும், தீக்கணம் என்றும் இரண்டு பகுப்பாகப் பிரிக்கப்பட்டுப், பாட்டின் முதற்சீர்களுக்கு அவை கொள்ளப்பட்டும் தள்ளப்பட்டும் வரும் செய்திகளை (66) ஆண்டு நோக்கி உணர்க. இவ்வமைப்புமுறை தக்கதா? தகுதியற்றதா? என்பனவற்றை இனி ஆராய்ந்து கருதுவோம்.

தமிழில் பாட்டமைப்பு

தமிழில் பாட்டமைப்பு முறை நேரசை, நிரையசை என்னும் இரண்டசைகளை அடியாகக் கொண்டுவரும் என்பர் **காக்கை பாடினியார்** முதலாகிய ஒரு சாராசிரியர். அவற்றுடன் நேர்பு, நிரைபு என்னும் இரண்டசைகளையும் கூட்டி நான்கசைகளை அடியாகக் கொண்டு வரும் என்பர் தொல்காப்பியர் முதலான ஒரு சாராசிரியர்.

வடமொழியில் பத்திய அமைப்பு

வடமொழியாளர் பாட்டினைச் சந்தஸ் என்றும் பத்தியம் என்றும் வழங்குவர். பத்தியம் என்றது பிற்கால வழக்காகும். அச் சந்தஸ் லகு, குரு என்று எழுத்து வேறுபாட்டால் வரும்.

தமிழில் அசைகள்

முன்னே கூறிய அசைகளுள் நேரசை, குறில் தனித்துவரினும், அஃது ஒற்றெடுத்து வரினும், நெடில் தனித்து வரினும், அஃது ஒற்றெடுத்து வரினும், நேரசை அல்லது தனியசை என்று கூறப் பட்டு நான்காகும்.

நிரையசை குறிலுங் குறிலும் இனணந்து வரினும், அஃது ஒற்றெடுத்து வரினும், குறிலும் நெடிலும் இணைந்து வரினும், அஃது ஒற்றெடுத்து வரினும், நிரையசை அல்லது இணையசை என்று கூறப்பட்டு நான்காகும்.

மேலே கூறப்பட்ட நேரசை நிரையசைகள் எட்டும் குற்றிய லுகரம் முற்றியலுகரம் என்னும் இருவகை உகரங்களைத் தனித் தனி அடுத்து வந்தால் அவை நேர்பு நிரைபு அசைகள் என்று கூறப்படும்.

அசை என்பது தாளத்தின் உட்கூறு. சீர் என்பது தாள முடிவு.

வடமொழி லகு குரு

வடமொழிச் சந்தஸ் லகு, குரு என்னும் இரண்டினையும் அடியாகக் கொண்டு வரும். அவற்றுள் லகு என்பது குறில் மட்டும் தனித்து வரும் ஓசையாகும்.

அக்குறில் ஒற்றெடுத்து வரினும் நெடில் தனித்து வரினும், அந்நெடில் ஒற்றெடுத்து வரினும் இம்மூவகை யோசை எல்லாம் குரு என்றே கொள்ளப்படும்.

வடமொழியாளர் கூறும் லகு குருக்கள் தமிழில் உள்ள நேரசைகளே

மேலே கூறிய லகு, குரு அமைப்பு முறைகளைப் பார்த்தால், தமிழில் உள்ள நேரசை நான்கே லகு, குரு என்னும் இரண்டாக வருகின்றன என்னும் உண்மை புலனாகின்றது.

அவர்கள் கூறும் முறைப்படிப் பார்த்தால் தமிழில் உள்ள நான்கு நிரையசைகளும் முறையே லகுவும் லகுவும், லகுவும் குருவும், லகுவும் குருவும், லகுவும் குருவும் (வெறி, நிறம், சுறா, விளாம்) ஆகும்.

வடமொழியாளர் லகுவிற்கு ஒரு மாத்திரை அளவு கூறி ஓரலகு பெறும் என்பர். குருவிற்கு இரண்டு மாத்திரை அளவு கூறி இரண்டலகு பெறும் என்பர்.

அம்முறையைப் பின்பற்றிய, தமிழ்ப் பாட்டியற் புலவர் நேர் லகு போன்றது ; ஓரலகு பெறுமென்றும் நிரை குரு போன்றது இரண்டலகு பெறுமென்றும் கூறுகின்றனர்.

இவர் இவ்வாறு கூறுவது பொருந்துமாறில்லை.

வேறுபாடு

தமிழ் யாப்பிலக்கண நூல்களில் வரும் அசைகள் தாளத்தின் உட் கூறுகளாயுள்ளன : லகு குருக்கள் அவ்வாறில்லை.

நேரசை என்றால் தனியோசை என்று பொருள் 'லகு' என்றால் கனமில்லாத ஓசை என்று பொருள்.

'நிரையசை' என்றால் இணையோசை என்று பொருள். 'குரு' என்றால் கனமான ஓசை என்று பொருள். இவ்வகையினாலும்

நேரசை நிரையசைகளும் லகு குருக்களும் வெவ்வே றியல்புடையன என்பது புலனாகின்றது.

தமிழில் மூவசைச் சீர் எட்டு

நேரசை, நிரையசை என்னும் இரண்டினை வைத்து உறழ்ந் தால் ஈரசைச்சீர் நான்கு வரும். இந்நான்கினை இரண்டுப்படியாக நிறுத்தி ஒன்றன் ஈற்றில் நேரையும் மற்றொன்றின் ஈற்றில் நிரையையும் சேர்க்க மூவசைச் சீர் எட்டாக வரும். இவ்வெட்டினுள் நேரீற்று மூவசைச்சீர் நான்கினையும் வெண்பாவுரிச்சீர் என்றும், நிரையீற்று மூவசைச்சீர் நான்கினையும் வஞ்சி உரிச்சீர் என்றும் வழங்குகின்றோம்.

வடமொழியாளர் கூறும் எட்டுக்கணம்

லகு, குரு என்னும் இரண்டினையும் நேரசை நிரையசைகளை வைத்து உறழ்ந்தால் இரண்டன் கூட்டம் நான்கும் மூன்றன் கூட்டம் எட்டும் ஆகும் பிற்கூறிய எட்டைத்தான் அவர்கள் கணம் என்று வழங்குகின்றார்கள்.

"லகுகுரு, கண, பத, விருத்தம்" என்பன அவர்கள் கூறும் சந்தஸின் உறுப்பாகும்.

வடமொழியாளர் லகு, குரு என்னும் இரண்டாற் கொண்ட எட்டுக் கணங்களுள் 1. லகுகுருகுரு, என்னும் ஆதிவருகையகணம் என்பர்; இதன் தெய்வம் நீா என்றும் இதனால் **தழைத்தல்** உண்டாகுமென்றும் உரைப்பர்.

2. குருலகு குரு, என்னும் இடை லகுவை ரகணம் என்பர், இதன் தெய்வம் பாம்பு என்றும், இதனால் **இறத்தல் நிகழும்** என்றும் இசைப்பர்.

3. 'குருகுருலகு' என்னும் ஈற்றுலகுவை தகணம் என்பர்; இதன் தெய்வம் ஆகாயம் என்றும், இதனால் **வறுமை** (ஒன்றுமின்மை) உண்டாகுமென்றும் உரைப்பர்.

4. 'லகு லகு லகு' என்னும் முற்றும் லகுவை நகணம் என்பர்; இதன் தெய்வம் சுவர்க்கம் என்றும், இதனாற் **செல்வம்** விளையு மென்றும் செப்புவர்.

5. 'குரு லகு லகு' என்னும் ஆதி குருவைப் பகணம் என்பர்; இதன் தெய்வம் திங்கள் என்றும், இதனாற் **புகழ்** விளையுமென்றும் புகல்வர்.

6. 'லகு குரு லகு' என்னும் இடைக்குருவை ஜகணம் என்பர்; இதன் தெய்வம் கதிரவன் என்றும், இதனால் **நோய்** விளையு மென்றும் புகல்வர்.

7. 'லகு லகு குரு' என்னும் ஈற்றுக்குருவை ஸ கணம் என்பர்; இதன் தெய்வம் காற்று என்றும், இதனால் **பரதேசம்** உண்டாம் என்றும் பகர்வர்.

8. 'குரு குரு குரு' என்னும் முற்றும் குருவை மகணம் என்பர்; இதன் தெய்வம் நிலம் என்றும், இதனால் **திருவுண்டாம்** என்றும் தெரிவிப்பர்.

பாட்டியலார் கூறுவது

தமிழில் பாட்டியல் இலக்கணத்தைப் பகர்ந்தவர்கள் நேரசையை லகுவுடனும், நிரையசையைக் குருவுடனும் ஒப்புமைப் படுத்தினாற் போல,

ஆதி நேராகிய கூவிளங்கனியை ஆதிலகுவாகிய யகணத் துடனும்; இடைநேராகிய புளிமாங்கனியை இடைலகுவாகிய ரக ணத்துடனும்; இறுதி நேராகிய கருவிளங்காயை இறுதிலகுவாகிய தகணத்துடனும்; முற்றும் நேராகிய தேமாங்காயை முற்றும் லகு வாகிய நகணத்துடனும்; அவற்றைப்போலவே, ஆதிநிரையாகிய புளிமாங்காயை ஆதி குருவாகிய பகணத்துடனும்; இடைநிரை யாகிய கூவிளங்காயை இடைக்குருவாகிய ஜ கணத்துடனும்; இறுதி நிரையாகிய தேமாங்கனியை இறுதிக்குருவாகிய ஸ கணத் துடனும்; மற்றும் நிரையாகிய கருவிளங்கனியை முற்றும் குரு வாகிய மகணத்துடனும் ஒப்புமைப்படுத்தி, அதற்குரிய தெய்வத் தையும் பயனையும் சேர்த்துவிட்டு, மூவகைச்சீர்களுள் இன்னின் னவை நற்கணத்தின் பாற்படுமென்றும் இன்னின்னவை தீக் கணத்தின்பாற்படுமென்றும் பாகுபாடு செய்துவிட்டனர்.

மூவகைச் சீர்களைக் கணக்கிட்டால்

ஆனால், மேற்கூறிய மூவசைச்சீர்களை லகுகுருக்களைக் கணக் கிடும் முறையிற் கணக்கிட்டால் கூவிளங்கனி 'குரு லகு குரு. லகு என்றும் புளிமாங்கனி லகு லகு குரு லகு லகு, என்றும், கருவிளங் காய் 'லகு லகு லகு குரு குரு என்றும், தேமாங்காய் குரு குரு குரு என்றும்,

புளிமாங்காய் 'லகுலகுகுருகுரு, என்றும் கூவிளங்காய் குருலகு குருகுரு, என்றும் தேமாங்கனி குருகுருலகுலகு, என்றும், கருவிளங் கனி 'லகுலகுலகுகுரு லகுலகு' என்றும் ஆகின்றபடியால் இவற்றை யகனம் முதலாகிய எட்டுக் கணங்களாகக் கூறமுடியாதே.

தாளசமுத்திரம் கூறும் செய்தி

தாள சமுத்திரம் என்பது தாளமரபுகளைக்கூறும் ஓர் இசை நூலாகும். அது, லகு குருவால் அமைந்த எட்டுக்கணங்களுக்கும், **மயிலைக்குவேறன்** என்னுந்தலைவனுக்கு உரிமையான எட்டு ஊர்ப்பெயர்களை எடுத்துக்காட்டாகக் கூறுகிறது. அவை அமைந்த வெண்பாவினைக் கீழே காண்க :-

துய்யவா மந்தூர் புகாரூர் தென் சூரியூர்
மயிலைக்குவேறன் வயலூர்—செய்யவயல்
மாகாழி யாகும் விராலிப்பூ வணம் மதுர
மயரஸத ஜ பந மாகும்'' (தாள சமுத் – பக் 15)

என்பது அப்பாடல். அதில் உதாரணமாக வந்த ஊர்ப்பெயர்களைக் கணக்கிட்டால்

'ஆமந்தூர்'	குருகுருகுரு	ம கணமாகும்;	இது தேமாங்காய்
'புகாரூர்'	லகுகுருகுரு	ய கணமாகும்;	இது புளிமா
'சூரியூர்'	குருலக்குரு	ர கணமாகும்;	இது கூவிளம்
'வயலூர்'	லகுலகுகுரு	ஸ கணமாகும்;	இது புளிமா
'மாகாழி'	குருகுருலகு	த கணமாகும்;	இது தேமாங்காய்
'விராலி'	லகுகுருலகு	ஜ கணமாகும்;	இது புளிமா
'பூவண'	குருலகுலகு	ப கணமாகும்;	இது கூவிளம்
'மதுர'	லகுலகுலகு	ந கணமாகும்;	இது புளிமா

மேலேதாள சமுத்திர நூல்கூறும் எட்டுக்கண வாய்ப்பாட்டைத் தமிழ் யாப்பிலக்கண முறைப்படி கணக்கிட்டால், தகணம் மகணம் மட்டும் மூவகைச்சீர்களாகும். மற்றைய கணங்களெல்லாம் ஈரசைச் சீர்களாகவே அமைகின்றன.

முடிவுரை :

மேற்கூறியவற்றை யெல்லாம் நன்கு கருதின், வடமொழி கூறும் லகுகுரு வேறு, தமிழ் மொழி கூறும் நேர் நிரை வேறு என்பது புலனாம். அதனைப் போலவே அட்டகணமும் வேறு மூவசைச்சீரும் வேறு என்பது புலனாம். இங்ஙனம் தம்முள் பொருந்தாதவற்றைப் பொருத்திப் பாட்டியலில் கூறப்படும் கணப் பொருத்தங்கள் தகுதியுடையனவாக அமையவில்லை என்பது என் எண்ணமாகும்.

குறிப்பு :

எட்டு முச்சீர்கட்குக் கணம் வகுத்துக்கொண்ட முறை, சேந்தன் திவாகரம், பிங்கலநிகண்டு, சூடாமணிநிகண்டு முதலியவற்றிலும் காணப்படுகின்றது. அதனால் இவ்வழக்கம் சங்க இலக்கிய காலங்கட்குப்பின் வடமொழி அமைப்பையொட்டி ஏற்பட்டுள்ளது.

திருக்கற்றளிப் பரமேசுவரர் கோயில் கல்வெட்டுகள்
(சென்ற இதழ் தொடர்ச்சி)

3. A. R. E. 141 of 1936-37
4. A. R. E. 152 of 1936-37.
5. வயலூர்த் தலவரலாறு, பக். 38, கல்வெட்டு எண் 15.
6. A. R. E. 156 of 1936-37.
7. A. R. E. 144 of 1936-37.
8. A. R. E. 147 of 1936-37.
9. A. R. E. 148 of 1936-37.
10. A. R. E. 153 of 1936-37.
11. வயலூர்த் தலவரலாறு, பக். 38, கல்வெட்டு எண் 16.
12. A. R. E. 154 of 1936-37.
13. வயலூர்த் தலவரலாறு. பக். 38, கல்வெட்டு எண் 17.
14. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், முற்காலச் சோழர் கலையும் சிற்பமும், பக். 121.
15. A. R. E. 151 of 1936-37.
16. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், முற்காலச் சோழர் கலையும் சிற்பமும். பக், 121.
17. மேற்படி பக். 121.
18. டாக்டர். இரா. கலைக்கோவன், வயலூர்க் கல்வெட்டுகள் திருக்கோயில் பிப்ருவரி 1984.
19. A. R. E. 1936-37, பக். 23-24.
20. A. R. E. 157 of 1936-37.
21. A. R. E. 149 of 1936-37.
22. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், முற்காலச் சோழர் கலையும் சிற்பமும், பக். 121.
23. A. R. E. 138 of 1936-37
24. A. R. E. 139 of 1936-37
25. A. R. E. 145 of 1936-37
26. A. R. E. 146 of 1936-37
27. A. R. E. 150 of 1936-37
28. A. R. E. 142 of 1936-37
29. A. R. E. 155 of 1936-37
30. A. R. E. 140 of 1936-37.
31. A. R. E. 143 of 1936-37
32. வயலூர்த் தலவரலாறு, பக். 36, கல்வெட்டு எண் 6.

(பாரதியார்)

குயில் பாடும் பாட்டு

K. சோமசுந்தரம், B. A., B. L., தஞ்சை.

குயிலின் பாட்டு, வாழ்க்கையின் தத்துவத்தையும், வையகத்தில் வாழ்ந்து கொண்டே தெய்வப் பேரின்ப நிலையினைப் பெறக்காத லொழுக்கத்தை உள்ளடக்கிய வாழ்க்கை விளக்கத்தையும் திறம்படத் தெரிவிக்கும் மாண்புடையது. நாத அமுதமாய்த் துலங்கும் குயிலின் மோகப்பாட்டின் கருத்துக்கள், குயிலின் வரலாற்றில் நடுநாயகமாய் உருக்கொண்டு விளங்குவது பற்றி, பாரதியார், தன் கற்பனையின் செல்வமும்,செல்வாக்கும் மிளிர, குயிலினைக் கருவியாகக் கொண்டு, குயிலின் காதல் கதைக்கு, குயில் பாட்டு என்று தலைப்புக் கொடுத் துள்ளார். எனவே, குயிலின் பாட்டு, பாரதியாரது கவிப் பொலிவுடைய குயில் பாட்டின் உரைவிளக்கம். பாயிரம் கூறும் தமிழ் மரபிற்கியைய, பாரதியார், தன் குயில் பாட்டிற்கு, குயிலின் பாட்டினையே, பாயிரமாக அமையும் அணிமைத் தொடர்பினை உண்டாக்கத் துணிந்தார். குயிலின் பாட்டிற்கு முக்கியத்துவமும் முதன்மையும் அளித்து, பாரதியார், குயில் நுதலும் பாட்டின் பொருளின் சிறப்புத் திகழும்படி அதன் கோட்பாடுகளை மிக்க பொருண்மை தோன்ற, குயில் பாட்டினையாத்துள்ளார்.

பாரதியார் தம் பாட்டில் குயிலை எஞ்ஞான்றும் சொன்மாலை பயின்று வரும் குயிலாகக் கண்டார். கன்னிக்குயில் அமுதூரப்பாடும் பாட்டினில் விளங்கும் மோகப் பெருக்குடைய இன்பக் களிப்பில், பாரதியார், தன் நெஞ்சைப் பறிகொடுத்து, இசை எண்ணம் தான், கவிதையென உணர்ந்தார்; வேதக்கலை, குயிலின் ஆவியில் பாய்ந்து கலந்துள்ளதை அகமகிழ அறிந்தார். பாரதியாருக்கு குயிலின் பாட்டு மோகனப் பேரின்பப் பாட்டு ; வேதப்பொருளுடைய அமுதப் பாட்டு ; சுடரும் சொற்சித்திரமும் தாங்கி, தெளிவும் இனிமையும் ஏந்தியபாட்டு ; தத்துவ நடைகொண்ட தெய்வீகத் தீம் பாட்டு ; வாழ்வு உரம் பெறுதற்குரிய அறிவு சான்றபாட்டு ; ஆனந்த அமைதி நிலவும் அரும்பாட்டு. ஓசை தரும் இன்பத் தாலும் அறிவுப் பொருளாலும் இத்தகைய பாட்டினைப்போல் விந்தை, பாரின்மிசை வேறு ஒப்பு இலதென்பது பாரதியாரின் அக நோக்கம். மண்ணக வாழ்வியல் தெய்வீகத்திருத்த முற வேண்டு மென்பதும் பாரதியின் உளமார்ந்த கருத்து. எனவே குயிலின் பாட்டு, வாழ்வின் வெற்றித் தத்துவத்தை சொற்செட்டுடன் எடுத்துக்காட்டும் உன்னத மின்னற் கவிதைப் பாட்டாகும்.

பாரதியார், குயில்பாடும் பாட்டின் உண்மைப் பொருள்களை அவனிக்கு உணர்த்த வேண்டி, அவற்றை உள்ளுணர்வு கொண்டு துருவித்துருவி கூர்ந்து ஆயுங்காலை, புதை பொருள்கள் போல் பல புலப்பட, அப்பொருள்களை, தம் கற்பனை உணர்வால் இலக்கியச் சிறப்போடு ஓவிய நடையில் தம் குயில் பாட்டில் உணர்த்த முற்பட்டார். பாரதியாரது உள்ளமும் கற்பனைச் சிறகடித்து காதல் வானில் பறக்கத் தொடங்கியது. குயில்பாடும் பாட்டு ஓசையும் தாளமும் ஒக்க அமைந்து பாடுவதற்குரிய பண்புகள் வாய்ந்துள்ளதை ஓர்ந்த பாரகியார், பொதுவாக தமிழ்ப் பாடல்களுக்கு உறுப்பாகவுள்ள எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை முதலாயினவற்றை ஏற்ற பெற்றியொடு அமைத்து, தாம் கருதிய பொருள், பொலிவுறவும் அணிநலம் திகழவும், தம் குயில் பாட்டினிலே அமைத்துக் கொண்டார். குயிலினது பாட்டின் இலக்கியச் சிறப்பினை உள்ளுங்காலை, பாரதியாரது உள்ளத்தில் பல நெகிழ்ச்சிகள், பொருளினிமையால் எழலாயின. உள்ளக் கிளர்ச்சிகள் எழப் பயன் சுரக்கும் குயிலின் இசையினிமையினை செவிமடுத்தியயளவில் உருகிய பாரதியார், குயிலினது குரலின் இசையினிமையினை உணர்த்த இயலாது, உன்னுந்தோறும், உள்ள நெகிழ்ச்சிகளை எழுப்பி மனத்தை உருக்கும் செவ்வி, இசைக்கு இயல்பாக இசையாதது கண்டு 'விந்தைக் குரலுக்கு மேதினியீர்! என் செய்கேன்' என வெய்துற்றார். இருந்தாலும், அவர் குயிலின் குரலில் உள்ளாழ்ந்த ஞானமோன இரகசியங்களை தெளிந்துணர்ந்து கொண்டார்.

'குயில் இசைத்துள்ள பாட்டினில் காணப்படும் உயர் ஞானப் பொருள்கள், உபநிடதங்களின் சாரமாகுமென பாரதியார் உணர்ந்து அவை எய்தற்கரிய பெரு மாட்சியினை நினைந்து சிந்தித்துணரத் தக்கவை என மனதிற் கொண்டார். அகத்திலும் புறத்திலும் காணப் படுவது பிரமம் என்றும் அது எல்லாமாய் எங்குமாய், என்றுமாய் எல்லையற்ற வல்லதாய் நிலவும் காண இயலாப் பரம்பொருள் எனவும், அது அண்டங்கள் யாவையும் ஆக்கியும், ஆற்றலுடன் பூட்டியும், காத்தும், தன்னுளே உளதாய் இலங்கியும், இலதாய் மறைந்தும், தன்மை பல கொண்டு தான் பலவாய் நிற்கும் ஆதியும் அந்தமுமிலாத அரும்பெரும் இறைமைப் பொருள் எனவும் பாரதியார் தெளிந்து கொண்டார். அஃதே எல்லாவுயிர்களிடத்தும் நுண்ணியதாய் ஒளிர்வதால் அதனை சிரத்தையோடுணர்ந்து சித்தமிசை கொண்டு அனுபவித்து தெய்வப் பெற்றி சிறக்க ஓதிப் பேணுவதே சாலச் சிறந்ததெனப் பெரிதும் அறிந்து தம் கருத்தில் பதித்துக் கொண்டார். சிந்தித்துணரும் ஏகாந்தத் தியானத்தால், இறையுண்மையினைக் கண்ட பாரதியார், புவியில் வாழும் உயிர்கள்

யாவையும் இறையெனப் போற்றி, குயிலையும் இறையெனக் கருதி, அதன் அழகினைக் கண்டுகளித்து, அது இசைக்கும் பாட்டின் தத்துவத்தை சுவைத்தும் அனுபவித்தார். இவ்வாறு தன்னிதயத்தே, அத்தத்துவத்தின் வாய்மையெல்லாம் ஒளிப் பொருளாய் இயங்கு வதைப் பாரதியார் கண்டு, மெய்ப் பயனாகிய சமத்துவ ஞானநிலை எய்தும் அருள் வாய்ப்பினைக் கொண்டு தன் ஊனிலும், உயிரிலும் உணர்விலும் நின்ற மெய்ப் பொருளின் பெரு நுகர்ச்சியில் திளைத்தார். குயிலோடும், அதன் பாட்டிசையிலும் ஒன்றியுள்ள உணர்வால், பாரதியார் தான் கண்டதையும் நுகர்ந்ததையும் தனது குயில் பாட்டில் சாற்றிப் பின்னர், பேரின்பத்தில் ஒருமை ஞான சமரச தத்துவத்திற்கேற்ப வாழும் நெறி முறையினைப் புகட்டி யுள்ளார்.

பாரதியாரது குயில் தெய்வீகக் காதலை வேண்டிக் கரைகின்ற ஞானத்துப் புள்; யாவர் மொழியினையும் எளிதுணரும் பேறுடையது: பாசமொழிக்கப் பயன் கூறும் திறனுடையது; இதன் குரல், உள்ளாழ்ந்த ஞானமோன இரகசியங்களைப் புலப்படுத்துவது; வெருவராதபடி எவ்வுயிர்களையும் தழுவிக் கொண்டு நட்புறவாடும் பெருமிதத் தன்மையுடையது; வாழ்வுக்கும் ஊறு செய்யாதும், உயிருக்கும் உறுகண் செய்யாதும் மிக்கதோர் தவப்பண்புமுடையது: உணர்ச்சிப் பொறுமையாலும் அறிவு அடக்கத்தாலும் திருந்தும் போக்குடையது: அறிவுறுத்து வதும் இன்புறுத்துவதும் அதனியல்பு. இதன் மூலம் பாரதியார், வாழ்வுக்கு அரணாகவுள்ள உலகியல் குறிக்கோள்களையும், ஒழுக்கப் பண்பு நிலைகளையும், தன்பாட்டில் பலபட நுவலப்பட்டுள்ளதை ஓர்ந்து நோக்கின், அதுமிக்க விம்மிதம் பயப்பதாகும். காதல் வாழ்வியலைக்காட்டும், குயிலின் பாட்டு, ஓங்கிய கற்பனைக் கருத்து நடைபயிலும் காப்பியச் சுவையினையுடையது. இது சொல்நயம், மெய்ப்பாட்டு நயம், குறிப்பு நயம் முதலிய நயங்களோடு இயங்கும் இலக்கியத்திருவும் அமைந்துவிளங்குவது. மற்றும் வன்மை, வளமை, புதுமை, இனிமை, செம்மை, தூய்மை முதலாய உண்மைகளுக்கெல் லாம் சான்றாக நின்று, கன்னிமையினைத் தனக்கே உரிமையாகக் கொண்டுள்ளது.

குயிலின் பாட்டில் பாரதியார் மனம் ஊன்றி ஈடுபடவே, அவரது உள்ளத்தில் விழுமிய உணர்வுகள் எழலாயின. அவ்வுயரிய எழுச்சி உணர்ச்சிகளைச் சிந்தாமலும் சிதறாமலும், தன்னுடைய குயிலின் காதற்கதைப் பாட்டினில் செறித்து வைத்து விடுகிறார். குயிலின் பாட்டினது எண்ணச் செறிவு பாரதியாரது குயில் பாட்டினிடையே திணிந்து கிடத்தலால், அக்குயிலின் பாட்டினது குறிக்கோள்,

வாழும் மக்களுயிர்க்கு இன்றியமையாததாயிற்று. குயிலின் பாட்டு கருத்துக்களும், இடிப்புரைகளும், 'குயில்பாட்டில்' இழையோடிச் செல்வதால் அவைகளைக் கணித்து உணர்தலே அறிவின் தொழிலாகும். அதன் மெய்ப்பொருள் காண்பதும் அறிவாகும். பாரதியாரது மனம் கற்பனையில் கருத்தூன்றிக் கவியவே, அவர் தன்னையும் மறந்து சிந்தனையெனும் சிறகு கொண்டு, உணர்ச்சி வானில் வீறுடன் பறந்து, கற்பனைக்கு பண்புருவமும் ஒலிநயமும் கொடுத்தார். அக்கற்பனையில் வாழ வைக்கும் சமய உணர்வு உண்மைகளையும் உணர்ந்து, அவை மக்களுயிர்களின் அக வாழ்வையும் புற வாழ்வையும் மாசுறா வகையில் ஈர்த்துப் பிணிக்கும் பெற்றியால் திகழ்வதையும் பாரதியார் கண்டு, குயில் பாடும் பாட்டின் சுவைதனில் ஒன்றிடத் தலைப்பட்டார். பாட்டின் சுவையில் பாரதியாரது அறிவு மனம் தோய்ந்திட அவருக்கு அரியதோர் மெய்யின்பம் இயல்பாய் வந்துற்றது. அவர்தம் புலன்களின் கூர்மையால் அதனை அறிவாலும் ஆர்வத்தாலும் உணர்ந்து, உள்ளத்துணர்வால் நுகர்ந்ததை அறிவுச் செறிவுடன் ஒருசேரச் சேர்த்து பெண்மை உள்ளத்தோடு கற்பனையும் வர்ணனையும் திகழக் குயில் பாட்டாகப் பாட முனைந்தார். பின்னர் பாரதியார் காந்தத் தன்மையும் கவிதைப் பண்பும் கொண்டவராய், உலகின் போக்கிற்கு, தொல்காப்பியனார் கருத்திற்கு இயைய தமிழின்பத்தைச் செறிவுடன் சேர்த்திட விழைந்தார்.

பாரதியார், தன்கலைப் புலமையால், உலகியற்கையில் காணும் முதல் கரு உரிப் பொருள் என்ற மூன்றும் முறைசிறந்து பாடலுட் பயின்று வரும் மரபு காரணத்தால், அப்பொருள்களின் கருத்து வளத்தினைக் கொண்டு தன் 'குயில் பாட்டில்' பொருளிலக்கண அமைதியொடு அணியுற அமைத்துள்ளார். அதனில, குயிலின் பாட்டு காதல் ஒழுக்க உணர்வாகிய உரிப்பொருளை உயிராகக் கொண்டுள்ளதென்பது துணியப்படும். குயிலின் பாட்டு நுவலும் காதல் வாழ்க்கைக்கு முதலிடம் கொடுத்து, பாரதியார், தான்பாடும் குயில் பாட்டிற்கு உடலாக, இயற்கையும் அதனோடியைந்த வாழ்க்கையும் முறையே குறிக்கும் முதலும் கருவுமென அமைத்துக்கொண்டு, உயிர் இயற்கையோடும் காதல் வாழ்க்கையோடும் இசைந்து பிரிக்க வொண்ணாவகையில், துணைபற்றி இணைந்து ஒன்றி நிற்கும் மாண்பினை எடுத்துக்காட்டி, இயற்கை வாழ்க்கை முறை இறைபால் செலுத்தும் ஒழுங்கினையும் சுட்டுவாராயினார். காதலாலே கடவுள் நிலை எய்தலாமென்றும் அதனால் சாகாமலிருத்தலும் கூடுமென பாரதியாரது அறுபத்தாறு அறிவுறுத்தி இன்புறுத்தும் நுட்பம் யாவரையும் இனிது வாழ்விக்க வல்ல மாட்சியினையுடைத்தென்பது ஈண்டு சற்றே நினைவு

கூர்தலுக்குரியது. எனவே இப்பாட்டு, நவில் தொறும் நூல்நயம் பெருவிருந்து நல்கும் எனும் வள்ளுவனார் வாய்மொழிக்குச் சிறந்ததோர் எடுத்துக் காட்டாக நின்று நிலவுவது தெளியப்படும்.

காதலின் மெய்ம்மைக் கொள்கையினையும், காதலின்பத்தையும் காட்டும் குயிலின் பாட்டினது வடிவம் எழுச்சியுணர்வை உள்ளத்தில் வளர்க்கும் தகைமை வாய்ந்தது. குயில் பாடும் பாக்களை மெட்டோடு இசைக் குரல் கொடுத்துப் பாடுங்கால் உள்ளத்து எழுச்சி உணர்வில் ஊறும் இறையுணர்வு தோன்றும் வகையில் அப்பாக்களின் நடை நுட்பமுடையது தெளியப்படும். இவைகளின் யாப்பியல், பொருண்மைக்கே, சிறப்பும் முதன்மையுமளித்து வாழ்விற்குரிய மங்கலப் பொருளமைதியினை நிலை நாட்டுகிறது. மற்றும் இறைமை ஞானவுணர்வால் எய்தும் நலன்களை — நன்மை, வலிமை, செல்வம், தூய அறிவு, நற்சிந்தை, தெளிந்த சித்தம், செம்மை பிறந்திடும் நற்கலைகள், மனத்திட்பம் முதலியன பெற்று தெய்வ வாழ்க்கையுற்றே இங்கு வாழ்ந்திடலாமென இப்பாக்கள் பறைசாற்றுகின்றன. இதற்கேற்ப இதன்கண் வந்துள்ள சொற்கள் பெருமிதங் கொண்டு ஆழ்ந்த வாழ்வியல் உண்மைகளை இன்பம் தோன்ற எடுத்துக்கட்டா நிற்கும்.

காதலிசைக்கும் குயில் குக்குக்கூ என்றுபாடும் தன்பாட்டின் மூலம், பாரதியாரது சிந்தைக்கு உவப்ப என்னநுதலிற்று ? அஃது எவ்வாறு அவரது சிந்தனைக்கு விருந்தாகியது? குறிப்பாகப் பாரதியார் அதன் தொக்கப் பொருளை அவனிக்கு உரைத்தது யாது ? என்ற வினாக்கள் எழுவது இயல்பு. அது பின் வருமாறு— வஞ்சக வழக்கெல்லாம் நிரம்பிய மக்களது வாழ்க்கையில் உண்மையாய, இன்பமும் காதல் பண்பும் உண்டாகவில்லை. அதனால் அது இன்ப வழியை நாடி எளிதே பின்பற்ற சில விதிகளைக் கற்பித்துக் காட்டியுள்ளது. அவ்வழி நமக்குள்ளேயே, இருளில் மிளிரும் ஒளியாகவே இருக்கிறது. அதன்படி. நாம் அமைதி தரும் இன்ப ஒளி அறிவுகொண்டு மக்கள்பால் அருள் பூண்டு, இரக்கங்காட்டி தியாகம் புரிந்து இசைபட மனநிறைவோடு இறைவனை தியானம் செய்து ஆத்மசக்தியுடன் ஒழுகினால், அன்பு வாழ்வு உலகில் நிலைபெறும். அன்பு வெள்ளப் பெருக்கில் அருள் அலை மொழித்ததால் ஆத்மசித்தி உண்டாகும். ஆத்ம சித்தி முயற்சியை கைவிடாது, முரண்பாடு நீங்கும் ஒருமைப்பாட்டை நிலைநிறுத்தி இறைபால், அறிவு வழி, சரண் புகுந்து, அவனையே உள்ளன்போடு, பாட்டிசை தரும் பக்திப் பரவசத்து தியானத்து ஆற்றலால், தானெனும் முனைப்பு அற்று தன்னை மறந்து ஒழுக வேண்டும். வாழ்வில் பக்குவமான நிலையாய இன்பமுற ஆத்ம

வேள்வியினைப் புரிந்து, ஆகம-வேத-கீத உணர்வால், இயற்கைச் சக்திகளுக்கு உயிர்நிலையாக இருந்து பிரமமாய் விளங்கும் உண்மைப்பொருளோடு, பிறிதொன்றும் தோன்றாவகையில், ஒன்றாகிவிடுவதே இறைவனைக் காணும் எளிதாய அடிப்படை உண்மைத் தத்துவம் என்பதேயாகும். இத்தகைய தத்துவத்தைப் பாரதியார் தமது சமரச நோக்கில் குயில் பாட்டின் கண் சுட்டிக் காட்டி,இறையருளில் நிறை காதலன்பு பொங்கக் கலந்து ஒன்றாகி விடும் வாழ்வே, நிலையாமையை வெல்லும் வாழ்வு என்பதைக் குறிப்பாக எடுத்து விளக்குவதை உய்த்துணர்க.

பண்ணோடு பயின்றுவரும் குயில் பாட்டின் உருவழகு, படிப் பார்க்கும் கேட்போர்க்கும் இனிமை பயக்கவல்லதாதலால், இனி ஞானத்தில் தலை சிறந்து குயில்மையலுறப்பாடிய பேரின்பப் பாட்டின் வலிமையினை உணர்ந்து பொருண்மையினைக் காண்குவம்.

"காதல், காதல், காதல்
காதல் போயிற் காதல் போயிற்
சாதல், சாதல் சாதல்?

காதல் எனும் சொல்லை மும்முறை வலியுறுத்துவதால், இப் பாட்டு, காதலின் பெருமையையும் தன்மையும் குறிப்பாக உணர்த்தி, காதலன் பின் வழியது உயர்நிலை என்பதையும், காதல் வாழ்வினால் உயர்தெய்வநிலை சித்தியாகும் என்பதையும் எடுத்துக்காட்டி, காதலன்பு வாழ்வின் நிலையாய நேர்மையியல் பினையும் நாண்நெறியினையும் தனிச்சிறப்புடன் புலப்படுத்தி விடுகிறது. காதல் இயற்கையாயது; இன்றியமையாதது; பெருமை பொருந்தியது; நுண்மைவாய்ந்தது; உண்மையும் வலிமையும் உறுதியுமுடையது. காதலிருவர், ஒருவரையொருவர் அறியாமலே உள்ளத்தைப் பிணித்து என்றும் புதுப்பித்துக் கொண்டிருக்கும் உள்ளுணர்வே காதலாகும். மற்றும், இஃது காதலிருவர் கருத்து ஒருமித்து தம்முள் ஆதரவுபெற்று, ஊடலறியா உவகையும், இன்ப அன்புங்கொண்டு இணங்கிவாழும் ஒரு அரிய கலையாகும். ஞானத்திறலினைச் செயலில் காட்டி இன்பத்தீயேற்றிக் கூட்டுவது தான் காதலன்பு, அருள்செறித்த அறிவால் மலர்ந்த அன்பு, காதலொழுக்கத்தின் உண்மையினை உள்ளத்தில் நிலைநாட்டும் பண்புடையது காதலன்பும் முறைமையும் இணைந்த காதல் வாழ்வு இசையழகு நிறைந்தது. காதலொழுக்க நெறியில் உடலுறவுக்கு அப்பாற்பட்ட, உண்மைக்காதற்பண்பு இறையின்வாழ்வுக்கு அடி கோலுவது, காதல், இல்லறத்தை உழைத்துப் பிழைக்கவகை செய்து குடும்பத்தினை அன்புத்தொழில் நிலையமாகப் பிறங்கச்

செய்யும் மாண்புடையது, குடும்ப ஆட்சிக்கு உரியதாகவுள்ள, காதல், அருள், இன்பம், புகழ், உறுதி, கூடல் ஆகியவை, நாதம் தாளம் பண் முதலியன போன்று தம்முள் ஒத்து வளரும் இசை வினைக் கொண்டுள்ளதால், இவைகளைத் துணிந்து குடிதழுவும் ஏந்தியகொள்கையினையுடைய காதற்கணவனும் மனைவியும் நல்லுணர்ச்சியோடு கூடிய பொறுப்பாற்றலால் ஆட்சிப் படுத்தின், மக்கட் பயிர் செழித்து வளருமென்பது பாரதியார் காட்டும் சிறந்த வாழ்வியல்.

நெஞ்சகத்தே அலர்ந்து அமையும் காதலன் பிணையும் முறைமையினையும் பொருட்படுத்தாது அளவிலா அறியாமை யாலும், 'ஒத்த மன நலமின்மையாலும், ஒழியாக் கவலைப் பெருக் கால் காதலன்பில் இன்பமுறிவு ஏற்படின் சாதல் நிகழ்தல் இயல்பு, மற்றும் காதலின்பம் மனவேறுபாடுகளால் துன்பச் சூழலில் அகப்பட்டும் சாதலுறும், காதலொழுக்கம் தற்காக்கும் படையாகத் திகழ்வதை விளங்காமற் போனால், சாதல் ஒருவகையிலும் இனிதாகும், குயிலின் காதல் பற்றிய முதற் பாட்டின்கண், கரணம் தப்பினால் மரணம் என சிலேடையாக வழங்கப்படும் பழமொழியின் சிறப்புப் பொருள் மறைந்துள்ளது. 'கற்பெனப்படுவது கரணமொடு புணர' கொடுப்போர் இன்றியும் கரண முண்'டே' என கற்பியலில், ஆசிரியர் தொல்காப்பியனார் நுவன்றியுள்ளார். கரணமென்பது, இல்லற வாழ்விற்காகத் திகழும் திருமணச் சடங்கில், நிகழும் காதல் உறுதிமொழியின் கருத்தைக் குறிக்கும். இத்தகைய காதல் உறுதி மொழி தவறிப் பெரயக்குமாயின், காதல் மணவாழ்வு சிதறி சாதலில் முடிதல் இயற்கை என்பதை மேற்கூறிய குயிலின் அழகுக் கவிதையில் கருக்கொண்டு விளங்குவதையுங் காண்க.

குயிலையும், அதன்பாட்டினையும் சான்றாக வைத்து, காத லறத்தினை அடிப்படையாகக் கொண்ட வாழ்வியலின் சிறப்பினை உணர்த்த பாரதியார் அருள், இன்பம், புகழ் உறுதி, கூடல் முதலாய வற்றை காதலன்பின் தேனருவிகளாகவும், இசையருவிகளாகவும் கருதி, அவையாவும் காதலன்பின் வழியையே, தம்தம் இன்பவழியாக உரிமை பாராட்டிக் கொண்டுள்ளன என்பதைத் தெளியவைத் துள்ளார். குயிலின் காதல் பாட்டினில் காதல் வாழ்வின் தத்துவமும், ஞானச் சுவையும் சுருதிச் சுடரொளியும், மண்ணில் விண்ணரசு வயங்கும் இரகசிய விளக்கங்களும் தொடர்புபட உள்ளதாதலின், ஒவ்வோர் மூன்று அடிகளையுடைய குயிலின் பாக்கள் பத்தும், நல் வாழ்வுக்குரிய ஓரின்ப அறிவுக்களஞ்சியமென்க.

பாரதியார், காதலன்பினைக் கொண்டு உயிருண்மையினை நிலை நிறுத்தல் வழி, இறைவனை உணர்தல் வேண்டுமென்பது,

குயிலின் முதற்பாட்டின் கண் விளக்கப் பட்டிருத்தலைக் காண வைத்தார். அவ்வாறு அக்காதலன்பு உயிருண்மையினை நிறுவத லில்லையேல், இயற்கை நெறியின் உட்கிடக்கை புலனாகாது சாதல் நேருதல் இயல்பு என்பதைப் பாரதியார் சுட்டுவாராயினார். உயிருண்மையினை அறிவின் பயனால் தெளிந்து, வாழ்வின் நிறைவிற்கு ஊற்றாய் வயங்கும் இயற்கைநெறியின் புதுமையினைக் காண, காதலன்பின் அருளுணர்வின் நல்லொளி, வாழக்கையினைச் செழிப்பிக்க வேண்டப்படும் என்பதை, அவர் ஐயுணர்விக்கு இடனின்றி வலியுறுத்துவாராயினார். காதலன்புடைய வாழ்வின் அருள்—அறநெறியினை, பாரதியார் குயிலின் பாட்டினில் கண்டு, அதனை மக்கள், தன் குயில் பாட்டில் காணும்படி வைத்தார். காதலன்பும் பூவும் கனியும் போன்றவையாதலால், காதலை அடுத்து வரூஉம் அருளினைப் பற்றி

'அருளேயா நல்லொளியே ;
ஒளி போமாயின், ஒளி போமாயின்
இருளே, இருளே, இருளே'

எனும் பாட்டினைக் கவனிப்போம்.

குடும்பத்தில் விளையும் காதலன்பின் முதிர்ச்சியே அருள். இஃது உலகுயிர்கண் மாட்டு செலுத்தப்படும் உள்ள நெகிழ்ச்சி யாதலின், உலகினை தன் குடும்பமாக அரவணைத்து அன்பினைப் பரப்பி ஆதரித்தல் அருளாகும் இதனை நல்லாற்றலால் நாடிச் செய்யும் உயிர் நல்லொளியுறுதல் உறுதி. அஃதே ஒருவர்க்குற்ற உயிர்த் துணை. அருளிலதேல், ஒளி வாழ்வும் உலக நலமுமில்லை யாகும். குடும்ப அமைப்பில் காணப்படும் காதலன்பு, அருளொளி மயமாய் உலகு எங்கணும் இயங்கி விளங்க வேண்டுமென்பது பாரதியார் கருத்து இத்தகைய அருளின் ஒளி வலியால் மக்கள் இறைநிலையுணர்ச்சியிற்றலைப்படும் வாய்ப்பு பெற்று பேரின்பப் பெருவாழ்வு அடைவர் என்பதும் பாரதியாரின் துணிவு. பாரதியார் அருளினை வாழ்வின் இலக்கணமாகப் பாவித்து, அதனை காதலன்பின் ஒளியினைப் பரவும் கதிர் எனக் கருதி, அருளால் அன்பொளி பரவும் தெய்வ மாட்சியினைத் தெளிந்தார். காதலன்பில் உண்மை இன்பம் பொலியுங்காலை, அறமும் அருளும் மலர்ச்சியுற, இறையொளி ஞாலமுழுதும் விளக்க முறத்திகழும் எனும் பாரதியாரின் கருத்தழகு உள்ளத்தைக் கவரும் பான்மையது. இவ்வுண்மையினைத் தேறுவார், அருளுக்கு அழிவில்லை யென்பதும், அருளால் உலகின்கண் இருள் ஒழியுமென்பதை அறிந்து கொள்வர்.

கள்ளொடு சிவணும் அவ்வியற்பெயர்

டாக்டர் ஏ. ஆதித்தன்,

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

தொல்காப்பியர் அஃறிணைப்பெயர்களைத் தொகுத்துக் கூறிய பின்றை 'கள்ளொடு சிவணும் அவ்வியற்பெயர்' எனச் சுட்டிக் கள்விகுதியின் வருகையினைக் குறிக்கின்றார். கள்விகுதியினைச் சுட்டும்நூற்பா தொல்காப்பியத்தில் பெறுமிடத்தினை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தொல்காப்பியர் பெயர்களை உயர்திணைக்குரியன (தொ. சொ. 164, 165, 166, 167, 168), அஃறிணைக் குரியன. (தொ. சொ. 169, 170) இருதிணைக்குரியன (தொ. சொ. 174, 176) என மூன்று வகையினவாகப் பாகுபடுத்தி ஒவ்வொன்றின் வகை தொகைகளை விரித்துக் கூறுகின்றார் இந்நிலையில் அஃறிணை இயற்பெயர்களைச் சுட்டிய பின்னர்,

கள்ளொடு சிவணும் அவ்வியற்பெயரே
கொள்வழி உடைய பலவறிசொற்கே [தொல். சொல். 171)

என்னும் நூற்பாவின் வாயிலாகக் கள்விகுதியின் வருகையினைக் கூறுகின்றார்.

இந்நூற்பாவிற்கு உரையாசிரியர்கள் அனைவருமே ஒருமித்த கருத்தினைக் கூறுகின்றனர். இளம்பூரணர் (தொல். சொல். 166), சேனாவரையர் (தொல். சொல். 169), நச்சினார்க்கினியர் (தொல். சொல். 171), தெய்வச்சிலையார் (தொல். சொல். 165) ஆகியோர் அஃறிணை இயற்பெயர்கள் கள்ளீற்றோடு பொருந்தி வருங்கால் பலவறி சொல்லாகும் எனக் கூறி 'ஆ', 'குதிரை' என்பன பால்பகா அஃறிணை இயற்பெயர்களெனவும் 'ஆக்கள்', 'குதிரைகள்' என்பன அஃறிணைப் பன்மை இயற்பெயர்களெனவும் கூறுகின்றனர்.

தொல்காப்பியர் இயற்பெயர்களை அறிமுகம் செய்யாத நிலையில் அஃறிணையில் இயற்பெயர்கள் கள்விகுதியினைப் பெற்றுவரும் பான்மையினைச் சுட்டியிருப்பாரா என்பது அடிப்படைப் பிரச்சினையாக அமைகின்றது. ஈண்டுக் குறிப்பிடப்பெற்றுள்ள நூற்பாவில் காணப்பெறும் 'கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயர்' என்னும் சொற்றொடரே இப்பிரச்சினைக்குக் காரணமாக அமைந்துள்ளது.

இதனை அடுத்த நூற்பா அஃறிணைப் பெயர்களுக்குப் புறனடை (தொல். சொல் 172) கூறும் வகையில் அமைந்துள்ளது. அஃறிணைப் பெயர்களைக் கூறும் நூற்பாவிற்கும், அஃறிணைப் பெயர்களுக்குப் புறனடை கூறும் நூற்பாவிற்குமிடையே அஃறிணை இயற்பெயர் பற்றிய நூற்பா அமைந்துள்ளது எனக்கருதுவது பொருந்துமாறில்லை.

தொல்காப்பியர் குறிப்பிடும் 'அவ்வியற்பெயர்' என்பதற்கு 'அந்த இயற்பெயர்கள்' என உரையாசிரியர்களைப் போன்று பொருள் கொண்டால் 'எந்த இயற்பெயர்கள்' என்ற வினா எழும். இவ் வினாவிற்கு விடை கூறும் வகையில் இந்நூற்பாவிற்கு முன்னர் அஃறிணை இயற்பெயர்கள் சுட்டப்பெற்றிருத்தல் வேண்டும். சுட்டடையினைப் பயன்படுத்துங்கால் அதற்கு முன்பாகச் சுட்டடையால் தழுவப்பெறும் இயற்பெயர்கள் குறிக்கப்பெற்றிருத்தல் வேண்டும்.

கள்விகுதியினைக் குறிக்கும் நூற்பாவின் முந்தைய நூற்பா அஃறிணைப் பெயர்களையே குறிக்கின்றதேயன்றி இயற்பெயர்களைக் குறிக்கும் வகையில் அமையவில்லை. எனவே 'அவ்வியற் பெயர்' என்னும் சொல்லாட்சி 'அத்தன்மை உடைய பெயர்' என்னும் பொருளில்தான் கையாளப்பட்டுள்ளது எனக் கருதலாம்.

அஃறிணை இயற்பெயரின் ஒருமை-பன்மை வேறுபாடு அது கொண்டுமுடியும் வினையின் வாயிலாகவே தெரிதல் இயலும் (தொல். சொல். 173) என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். இக்கருத்தும் முந்தைய கொள்கையினை வலியிறுத்தும் வகையில் அமைந்துள்ளது எனலாம். அஃறிணை இயற்பெயர்கள் கள்விகுதியினை ஏற்றுவாரா எனவும் இவற்றின் ஒருமை-பன்மை வேறுபாடு இவை கொண்டு முடியும் வினையினைப் பொறுத்தே அமையும் எனவும் தொல்காப்பிய செய்திகளினின்றும் தெரிய வருகின்கின்றது.

தொல்காப்பியர் பன்மை இயற்பெயர்கள் ஒன்று, பல, ஒருவர் என்னும் பால்களுக்குப் பொருந்தி வரும் என்று (தொல். சொல்.184) குறிப்பிடுகின்றார். பன்மை இயற்பெயர்கள் அஃறிணை ஒன்றன் பாலுக்குப் பொருந்திவர வேண்டுமாயின் அவை பன்மை விகுதியாகிய 'கள்' இன்றியே அமைதல் வேண்டும். தொல்காப்பிய செய்தியினின்றும் அஃறிணை இயற்பெயர்கள் 'கள்' விகுதி ஏற்று வாரா என்பதனைத் தெரிந்து கொள்ள முடிகின்றது.

தொல்காப்பியர் பதினான்கு இடங்களில் 'இயற்பெயர்' என்னும் சொல்லாட்சியினைப் பயன்படுத்தியுள்ளார்; இவற்றுள்

அடையொடு வரும் இடங்களிலெல்லாம் 'அத்தன்மையுடைய பெயர்' என்ற பொருண்மையில்தான் கையாளப்பெற்றுள்ளன.

மூன்று நிலைகளில் தொல்காப்பிய உரையாசிரியர்களின் கருத்து பொருந்துமாறு அமையவில்லை என்பதனைத் தெளிவுறுத்த இயலும்.

1. 'கள்ளொடு சிவணும் அவ்வியற்பெயர்' என்னும் சொற்றொடர் அமையப்பெற்றுள்ள நூற்பாவிற்கு முன்பாக அஃறிணை இயற்பெயர்கள் குறிப்பிடப் பெறவில்லை. இதற்கு முன்னைய, பின்னைய நூற்பாக்கள் அஃறிணைப் பெயர்கள் பற்றிய செய்தியினைக் குறிக்கும் வகையில் அமைந்துள்ளது. எனவே 'அவ்வியற்பெயர்' என்பது ஈண்டு 'அத்தன்மையராய அஃறிணைப் பெயர்கள்' என்பதையே குறிக்கும்.

2. தொல்காப்பிய முறைமைப்படி அஃறிணைப் பன்மை இயற்பெயர்கள் கள்விகுதியினை ஏற்றுவருவதில்லை. ஆதலின் ஒருமை-பன்மை இயற்பெயர் வேறுபாடு கொண்டு முடியும் வினையினை அடிப்படையாகக் கொண்டமையும் என்று தொல்காப்பியர் கூறுகின்றார். பன்மை இயற்பெயர்கள் அஃறிணை ஒன்றன் பாலுக்குப் பொருந்திவரும் என்பது இதனை அரண் செய்கின்றது.

3. அடையெடுத்து வரும்'இயற்பெயர்' என்னும் சொல்லாட்சி தொல்காப்பிய மொழியில் 'இயல்புடைய பெயர்' என்னும் பொருண்மையில்தான் கையாளப்பட்டுள்ளது.

ஈண்டுக் கூறப்பெற்ற செய்திகளினின்றும் தொல்காப்பியர் 'கள்ளொடு சிவணும் அவ்வியற்பெயர்' என்னும் சொற்றொடர் வரப்பெறும் நூற்பாவில் இயற்பெயர்களைச் சுட்டவில்லை என்பது தெரியவருகின்றது.

துணை நூற்பட்டியல் :-

1. ஆதித்தன் ஏ., 'இலக்கணத்தில் இயற்பெயர்கள்' மதுரை காமராசர் பல்கலைக்கழக வியாழவட்டக் கருத்தரங்கு, 1984.

2 சண்முகம், செ.வை., 'விரவு வினை' மொழியியல், தொகுதி 6, எண், 4 (1983), பக். 1-73.

3. தொல்காப்பியர் தொல்காப்பியம்-சொல்லதிகாரம் நச்சினார்க்கினியர் உரை, கழக வெளியீடு, சென்னை, 1963.

4. Alan Gardiner. S., The Theory of Proper Names, Oxford, 1954.

பொழிற்றொண்டர் குறிப்பு :

பெயரியலுள் ஆசிரியர் தொல்காப்பியர் உயர்திணைப் பெயர் களை வரையறை செய்து கூறிய பின்னர் அஃறிணைப் பெயர்களை "அது இது உது என வரூஉம் பெயரும்" என்னும் நூற்பா முதலாக மூன்று நூற்பாக்களுள் திரிபின்றிப் பால் விளக்கும் அஃறிணைப் பெயர்களை வரையறை செய்து கூறுகின்றார்.

இயற்பெயர்கள் இரு திணைக்கும் பொதுவாக வருவனவும், அஃறிணை இருபாலுக்கும் பொதுவாக வருவனவும் என இரு வகைப்படும். அவற்றுள் அஃறிணை இருபாற்கும் பொதுவாக வரும் இயற்பெயர், கொண்டு முடியும் வினையான் ஒருபாலுக்குரியதாகி நிற்கும். அஃறிணைப் இயற்பெயர் "கள்" என்னும் விகுதி இடைச் சொல்லொடு கூடி நிற்பின் கொண்டு முடியும் வினையை நோக்காமல் அவை தாமே பல வறிசொல்லாகக் கொள்வதற்கு உரியவாக நிற்கும் . என்பது "கள்ளொடு சிவணும் ... ... பல வறி சொற்கே" என்னும் சூத்திரத்திற்கு உரையாசிரியன்மார் கூறும் விளக்கமாகும்.

இயற்பெயர் எனினும், விரவுப்பெயர் எனினும், பொதுப்பெயர் எனினும் ஒக்கும்.

"அது இது உதுஎனவரூஉம்" என்னும் நூற்பாவானும், பல்ல சில்ல என்னும் நூற்பாவானும் எடுத்துக்கூறிய சுட்டுப்பெயர் வினாப் பெயர் தொகுதிப்பெயர்,வினையாலணையும் பெயர் (குறிப்பு வினை யாதற்கும் உரிய) பண்புகொள்பெயர், எண்ணுப்பெயர் ஆயவை ஒழிந்த பிற இடுபெயர்கள் யாவும் அஃறிணை இயற்பெயாகளே என்பதனை

அஃறிணை விரவுப்பெயர் இயல்பு மாருளவே (எழுத்—156)
அஃறிணை விரவுப்பெயர்க் கவ்வியல் நிலையும் (எழுத்—158)
கிளந்த இறுதி அஃறிணை விரவுப்பெயர்
விளம்பிய நெறிய விளக்குங்காலை (விளி—31)
தெரிநிலை உடைய அஃறிணை இயற்பெயர்
ஒருமையும் பன்மையும் வினையொடுவரினே (பெய—17)

என ஆசிரியர் முன்னும் பின்னும் புலப்படுத்தியுள்ளார்.

"கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயரே" என்னும் தொடருள் ள அகரச்சுட்டு இயற் பெயரைச் சுட்டுவதாக இக்கட்டுரை

யாசிரியர் கருதுகின்றார். அச்சுட்டு அதிகாரப்பட்டு நிற்கும் அஃறிணையைச் சுட்டி நிற்பதாக உரையாசிரியன்மார் உணர்ந்து விளக்கங் கூறியுள்ளனர். அகரச்சுட்டு வருமொழி உயிர் முதல் நோக்கி வகரப்புள்ளி மிக்கு நிற்பதன்றி அது வகர ஈற்றுச் சுட்டுப் பெயர் அன்று.

கள் என்னும் விகுதியிடைச்சொல் பெறாமல் பட்டாங்கு நிற்கும் அஃறிணை இயற் பெயர்களே ஒன்று-பல-ஒருவர் என்னும் நான்கு பாலின் கண்ணும் விரவும் என்பது பெயரியல் 28 ஆம் நூற்பாவின் கருத்தாகும்.

இக்கட்டுரையாசிரியர் தொல்காப்பியச் செய்தியினின்றும் அஃறிணை இயற்பெயர்கள் கள்விகுதி ஏற்று வாரா என்பதைத் தெரிந்து கொள்ள முடிகிறது என வரைகின்றார்.

பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள் [கற்—10]
யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப [கற்—52] என்பவை

ஆசிரியர் கூற்றுக்கள்.

தமிழில் பின்னிணைகள்

(டாக்டர். மோ. இசரயேல், மதுரை-625 021.).
[பேராசிரியர் & தலைவர், மொழியியல் துறை]

உலகமொழிகளில் சில ஒருநிலைச்சொற்கள் (Particles) பெயர்ச்சொற்களின் முன்னர் அல்லது பின்னர் நின்று அவற்றின் இலக்கணத் தொடர்பினை, அதாவது வாக்கியத்தில் பிறசொற்களுடன் குறிப்பாக வினைச்சொற்களுடன் அவற்றின் வேற்றுமைத் தொடர்பினை உணர்த்துகின்றன. பெயர்ச்சொற்களின் முன், பின் என அவை வழங்கும் இடத்தின் அடிப்படையில் அவை முறையே முன்னிணைகள் (prepositions), பின்னிணைகள் (post-positions) என அழைக்கப்படுகின்றன.

சிலமொழிகளில் முன்னிணைகள் மட்டுமே உள; வேறு சிலவற்றில் பின்னிணைகள் மட்டுமே காணப்படுகின்றன. இவை இரண்டும் அமைகின்ற மொழிகளும் உண்டு. இவ்வடிப்படையில் மொழிகளை முன்னிணை மொழிகள் (prepositional languages), பின்னிணை மொழிகள் (postpositional languages) என இரு வகைகளாகப் பகுக்கலாம்.[1]

தமிழில் பின்னிணைகள் மட்டும் காணப்படுவதால் பின்னிணை மொழிகளுக்குரிய பல இயல்புகளும் தமிழுக்கு ஏற்புடையனவாக அமைந்துள்ளன. வாக்கியத்தில் எழுவாய்-செயப்படுபொருள்-வினை (SOV) என்ற வரன்முறையில் உறுப்புக்கள் அமைதல், அதாவது செயப்படுபொருள், அதன் வினைக்கு முன்னர் வருதல். பெயரடை பெயருக்கு முன்னிற்றல், உடைமை வேற்றுமை அதனை ஆளும் பெயருக்கு முன்னிற்றல், ஒப்பீடு அமைப்புக்களில் (Comparative Constructions) அளவு-குறியீடு-பெயரடை (Standard-Marker-adjective) என்ற வரிசையில் உறுப்புக்கள் நிற்றல், தொடர்புநிலை (பெயரெச்ச) அமைப்புக்களில் (Relative constructions) தொடர்புநிலை வினைச்சொல் பெயருக்கு முன் நிற்றல், ஆம்-இல்லை (Yes-no-type) வினா வாக்கியத்தில் வினாவை உணர்த்தும் ஒருநிலைச்சொல் குறிப்பிட்ட சொல்லின் இறுதியில் வருதல், வினையெச்சம் வினை முற்றுக்கு முன்னர் நிற்றல், துணைவினை முதல் வினைக்குப் பின்னால் வருதல், ஒரே வினை ஏற்கும் இரு செயப்படுபொருள்களுடன் அமையும் வாக்கியத்தில் வினை வெளிப்படத் தோன்றாநிலை (gapping) முதல் செயப்படு பொருளுக்குப் பின்னால் வருதல், பெரும்பாலும் பின்னொட்டுக்கள் (affixes) வருதல் ஆகிய இயல்புகள்யாவும் தமிழ்மொழி அமைப்பில் காணத்தக்கன.[2]

தமிழில் வழங்கும் பின்னிணைகள் பற்றி ஆய்வதே இக் கட்டுரையின் நோக்கம் ஆகும். அவை பெயர்ச்சொற்களின்பின் வேற்றுமை உருபுகளுக்குப் பதிலாக நின்று, வேற்றுமைப் பொருளை உணர்த்துகின்றமையால் சொற்களே உருபுகளாகச் செயலாற்று கின்றன என்ற பொருளில் "சொல்லுருபுகள்" என மரபு நெறியில் அழைக்கப்பட்டன. இவை தொடர்களில் சொற்களுக்கிடையே, குறிப்பாக,பெயருக்கும் வினைக்கும் உள்ள நுட்பமான வேற்றுமைத் தொடர்பை உணர்த்தப்பயன்படுகின்றன.

பின்னிணைகள் திணை-பால்-எண் வேறுபாடு உடையன அல்ல; காலம் காட்டுவதில்லை;பிறிதொரு பின்னிணையை ஏற்று வருவதும் இல்லை. இவற்றுட் சிலவற்றுடன் உருபு வடிவங்கள் இணைந்து வருதல் காணப்படினும் அவ்வுருபுகள் வேற்றுமைப்பொருள் வேறுபாடு செய்வன அல்ல.

முன்னால்	ஆல்	வரையில்	இல்	வரைக்கும் -கு-
பின்னால்	ஆல்	இடையில்	இல்	சுற்றிலும் -இல்-

பின்னிணையும் உருபும்

இவை இரண்டும் சொற்களின் பின்வந்து வேற்றுமைத் தொடர்பை உணர்த்துவன. பின்னிணைகள் சொல்நிலை (word) பெற்றவை. உருபுகள்யாவும் ஒட்டுக்களே. இவ்வகையில், பின்னிணைகள் வாக்கியத்தல் உறுப்புக்களாக அமையும் தொடர் நிலைக்கூறுகள் (syntactical category) ஆகும். ஆனால் உருபுகள் சொல்லின் உறுப்புக்களாக அமையும் உருபன்நிலைக்கூறுகளே (morphological category)

பின்னிணைகள் பெரும்பாலும் ஈரசையின; இரண்டுக்கு மேற் பட்டும் வருவன. உருபுகள் பெரும்பாலும் ஓரசசையினவே. பின்னிணைகள் வேற்றுமை உருபுகளுடன் இணைந்து வருதல் பெரும்பான்மை. ஆனால் உருபுகள் பிற உருபுகளுடன் இணைந்து நிற்றல் இல்லை.

எ-டு. வாளைக் கொண்டு வெட்டினான் ஐ-கொண்டு
ஊரினின்று வந்தான் இல்-நின்று

உருபுகளை அவை இணைந்து நிற்கும் பெயர்களினின்று பிரித்தல் இயலாது. ஆனால் பின்னிணைகள் 'உம்' உருபால் தாம் சார்ந்து நிற்கும் பெயர்களினின்று பிரித்தற்கு இடம் தருகின்றன.

எ-டு 1. அச்சிலை கோயிலுக்கு முன்னால் நிற்கின்றது
அச்சிலை கோயிலுக்கும் வீட்டுக்கும் முன்னால் நிற்கின்றது.

2. அவன் செங்கல் கொண்டு கட்டினான்
அவன் செங்கலையும் சுண்ணாம்பையும் கொண்டு கட்டினான்.

தோற்றம்

பின்னிணைகள் பெரும்பாலும் பெயர்களினின்று அல்லது வினைகளினின்று தோன்றியவைகளே. இவற்றில் பல வடிவங்கள் முழுநிலையில் பெயர்களாகவோ வினைகளாகவோ வழங்குகின்றமைக்குச் சான்றுகள் உள. இவை பின்னிணைகளாக வழங்கும் போது சொல்வேறுபாட்டு உருவங்களை (indeclinable) ஏற்காத ஒருநிலைச் சொற்களாகவே அமைகின்றன.

எ-டு. புறத்திருந்தான் ஊர்ப்புறம்
அகத்திருந்தான் ஊரின் அகம்

பின்னிணையும் பெயரும்

பின்னிணைகள் பெயரடையால் (adjectives) தழுவப் படுவதில்லை. ஆனால் பெயர்கள் அவற்றால் தழுவப்படும். மேலும் பெயர்கள் இணைந்து நிற்கும் பெயர்தொகைகள் (nominal compounds) பெரும்பாலும் உள்வட்டத் தொடர்களாக (endocentric construotions) அமைய, பெயருடன் பின்னினை சேர்ந்து நிற்கும் அமைப்புக்கள் எப்போதுமே வெளிவட்டத் தொடர்களாக (exocentric construetions) அமைதலைக் காணலாம்.

ஏ-டு. ஊர்க்கேணி ஊரின் அகம்
காட்டுப்பூனை காட்டினுள்

பின்னிணையும் வினையும்

கொண்டு, தொட்டு, வேண்டி, குறித்து, பற்றி போன்ற பின்னிணைகள் அமைப்பில் வினையெச்சங்கள் போலக் காணப்படுகின்றன. ஒரு சில பின்னிணைகள் போலவும் காட்சியளிக்சின்றன.

வினையெச்சங்கள் துணைவினையை ஏற்கலாம். பின்விணையுடன் துணையினையை இணைத்தல் இயலாது.

எ-டு. அவன் வந்து கொண்டிருந்தான்
அவன் வாள் கொண்டுவந்தான்

வினையெச்சத்திலனப் பெயரினின்று தெளிவாகப் பிரித்துவிட முடியும்.

பின்னிணைகள் பெயருக்குப் பின்னர் வர, துணை வினைகள் வினைக்குப் பின்னர் வருகின்றன. பின்னிணைகள் பெயரின் செயல்

வேறுபாட்டை விளக்க, துணைவினைகள் வினையின் செயல் வேறு பாட்டைப் புலப்படுத்துகின்றன.

எ-டு. அவன் வாள்கொண்டு வெட்டினான்.
அவன் தோட்டத்தில் நடந்து கொண்டிருந்தான்.

வேற்றுமைப் பகுப்பு.

பின்னிணைகள் அவை வழங்குகின்ற வேற்றுமைப் பொருள் அடிப்படையில் பகுத்துக்காணுங்கால் தமிழில் ஒப்புப்பொருள், வரையறைப்பொருள், தொடர்புபொருள், ஒழிதற்பொருள், பகிர்தற் பொருள் போன்றவற்றிற்கும் தனித்தனியே வேற்றுமைகளை அமைத்துக்காணும் வாய்ப்பு உள்ளது[3]. இவண், தொல்காப்பியர் காலத்தில் ஐந்தாம் வேற்றுமையின் 'இன்' உருபு பெரும்பாலும் ஒப்புப் பொருளையும் சிறுபான்மை வரையறைப் பொருளையும் உணர்த்தியமை குறிப்பிடத்தக்கது[4].

தொல்காப்பியரும் நன்னூலாரும் ஏழாம் வேற்றுமை உருபு களாக அன்றேல் அதன் சிறப்புப் பொருளை வேறுபடுத்தும் பெயர் களாகத் தருபவைகள் பெரும்பாலும் பின்னிணைகளே[5]. அவற்றில் பல குறைநிலை யெய்திய பெயர்களே ; பெரும்பாலானவை வினையடைப் பெயர்களாகச் செயலாற்றுகின்றன.[6]

இடப்பொருள் : முன், பின், எதிர், நேரே, மேல், கீழ், பிறகு, பக்கல், உள், கண், கிட்ட, இடம், வயின், மாட்டு, வழி, பால், வாய் மருங்கு, மிசை, உம்பர், புடை, நடுவண், பாங்கர், அகத்து, திறத்து, முகம், வைத்து, இடையில், பேரில்

உடைமைப்பொருள் : உடை, உடைய

உடனிகழ்ச்சிபொருள் : கூட, உடன்

கருவிப்பொருள் : கொண்டு

நீங்கற்பொருள் : தொடங்கி, தொட்டு, முதல், நின்று, இருந்து

கொடைப்பொருள் : (தொடர்புடையன) ஆக, பொருட்டு, வேண்டி, நிமித்தம், மூலம், காரணம், வழியாக, படி (?).

ஒப்புப் பொருள் : ஊங்கு, விட, காட்டிலும், போல, படி (?)

வரையறைப் பொருள் : வரை, வரையில் வரைக்கும் வரையிலும், மட்டும், காறும்

தொடர்பு பொருள் : பற்றி, குறித்து, சொல்லி, சூழ.

ஒழிதற் பொருள் : தவிர, ஒழிய

பகிர்தற் பொருள் : தொறும், தோறும்.

உருபேற்கும் வகையில் பாகுபாடு :

பின்னிணைகளில் ஒரு சில தவிர பெரும்பாலானவை ஏதேனும் வேற்றுமை உருபைத் தொடர்ந்துதான் வருகின்றன. அவை முன்னர்ப் பெற்று வருகின்ற வேற்றுமை உருபுகளின் அடிப்படையில் அவற்றைப் பகுத்து இங்கு ஒரு பட்டியல் தரப்படுகின்றது.

வேற்றுமை உருபை முன்னர் ஏற்காதவை : தொடங்கி, தொட்டு, வரை, தோறும், முதல், மட்டும், தவிர, கொண்டு.

ஐ உருபு : குறித்து, பற்றி, சொல்லி, தவிர, ஒழிய, போல், விட, சூழ, சுற்றி, சுற்றிலும், காட்டிலும், கொண்டு, மட்டும், தவிர, தொட்டு

கு உருபு : வேண்டி, முன், பின், நேரே, பதில், மேல், கீழ், ஆகு, எதிர், பிறகு,

உடைமை – உருபு ஏற்கும் வடிவம் (– அன்/– இன்) : முன், பின், மேல், கீழ், பக்கல், அகம், பேரில், உள், படி, அகத்து, நிமித்தம், மூலம், கிட்ட, இடம், பிறகு, வயின், மாட்டு, எதிர், வழி, பால், வாய், உடை, திறம், முகம், உடன், பொருட்டு, திறத்து, மருங்கு, மிசை உம்பர், புடை, உடைய, ஊங்கு, காரணம், பாங்கர், நடுவன்.

இன் / இல் உருபு : நின்று, இருந்து, வைத்து.

ஒடு உருபு : கூட

சில முடிவுகள்

1. பின்னிணைகள் வேற்றுமைப்பொருள் வேறுபாட்டினை உணர்த்துவன.
2. அவை திணை-பால்-எண், காலம், வேற்றுமை ஆகிய வேறுபாடுகளை ஏற்காதவை.
3. அவை பெயருக்குப் பின்னர் சிறுபான்மை நேரடியாகவும், பெரும்பான்மையும் உருபுடன் இணைந்தும் வருவன.
4. அவை பெரும்பாலும் பெயர் வினைகளின்று தோன்றியவை.
5. எனினும் அவை பெயர்வினைகளின்று வேறுபட்ட செயல்நிலை (function) உடையவை.
6. அவையாவும் தொடர்நிலைக் கூறுகளாகக் கொள்ளத்தக்கன.
7. தமிழில் வழங்கும் பின்னிணைகளின் அடிப்படையில், தமிழ் மொழியில் இன்னும் சில வேற்றுமைகளைக் கூடுதலாகக் கொள்ள வாய்ப்பு உண்டு.

அடிக்குறிப்புக்கள்

1. Greenberg, J. H. Some Univarsals of Grammar with Particular Reference to Meaningful Elements, A Reader in Historical and Comparative Linguistics, pp. 309 310.

2. ,, ,, ,, , pp. 308, 327.

3. Israel, M., A Grammar of the Kuvi Language, 1979, pp. 73-78.

4. தொல், சொல். 77.

5. தொல், சொல். 82, நன்னூல் 302
Israel, M., The Treatment of Morphology in Tolkappiyam, 1973, pp. 103, 104.

6 இசரயேல், மோ. இலக்கண ஆய்வு-பெயர்ச்சொல், 1976, பக். 88–94.

ஆஸ்மா என்ற ஈளைநோய்

(டாக்டர் சு. நரேந்திரன் எம்.எஸ். தஞ்சை)

மூச்சு விடுவது என்பது இயல்பாக நடைபெறும் செயல். அந்த இயல்பு மாறாதவரை நாம் அதனை உணர்வதில்லை ஆனால் மூச்சுவிடுவதில் இடையூறு ஏதாவது நேரும்பொழுது மட்டுமே உணர்கிறோம். இந்நிலையைப் பொதுவாக இளைப்பு என அழைக்கிறோம். இந்த இளைப்பு நுரையீரல் மற்றும் இருதய நோய்களின் முக்கிய அறிகுறியாகும்.

ஆஸ்த்மா என்ற ஈளை நோயினால் கஷ்டப்படும் நோயாளிகள் அதிகமாக கஷ்டப்படுவது இந்த இளைப்பினால்தான். இந் நோயினால் இளைப்பு ஏற்படும்பொழுது மூச்சுக் கிளைக் குழல் சுருங்கி விடுவதால் அதிலுள்ள தசைகள் விரைப்பாகி, சளிப்படலம் வீங்கிக் காற்றின் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படும். இவ்வறி குறிகள் அதிகமாகவோ, குறைவாகவோ ஏற்படுவது மூச்சுக் குழலுக்குள் செல்லும் பொருள்களுக்கும் உடல் எதிர்ப்பு நிலைக்கும் ஏற்படும் விளைவுகளைப் பொறுத்தது. மூச்சுக் குழலில் இவ் விளைவுகள் அடிக்கடி நிகழும்பொழுது பிசின் போன்ற திரவம் உற்பத்தியாகும். மேலும், மூச்சுக்குழல், தன்நெகிழும் தன்மையை இழந்துவிடும்.

ஆரோக்கிய நிலையில் உள்ளவர்களைவிட நுரையீரல், பெருத்து நெகிழும் தன்மையை இழந்து காணப்படும். மேலும் மூச்சுவிடும் பொழுது, நுரையீரலுக்குள் சென்று வெளிவரும் காற்றின் அளவும் குறைந்து காணப்படும். இந்நிலையில் இரத்த அணுக்களில், பிராணவாயுவின் அளவு குறைவாகவே காணப்படும்.

ஈளை நோய் ஏற்படக் காரணங்கள் யாவை ?

ஈளை நோய் தோன்றுவதற்குப்பல காரணங்கள் உண்டு. அவற்றின் முக்கியமானது பாரம்பரியம். அதாவது, தாய் தந்தையருக்கு ஈளைநோய் இருந்தால், அவரது குழந்தைகளுக்கும் இந்நோய் தொடரும் தன்மை வாய்ந்தது. குழந்தைகளுக்கு ஆரம்பத்தில் இளைப்புத் தோன்றாமல் மற்ற ஒவ்வாமை அறிகுறி களான பேய்தடிப்பு, எக்சிமா போன்றவைகள் உண்டாகும். மேலும், குழந்தைகள் உணர்ச்சிவசப்படுபவர்களாகவும் தன்னைப் பற்றியே நினைத்து ஏங்கிக் கொண்டிருப்பவர்ராகவும் காணப் படுவார்கள்.

பாரம்பரியத்தைத் தவிர ஒவ்வாமை, உடலின் மிகை எதிர்ப்பு உணர்ச்சி, மனநிலை மாற்றம் போன்ற நிலைகளிலும் ஈளை நோய் உண்டாகலாம். ஒவ்வாமையும் தொற்றும் இரட்டையர்கள் என்று கூடச் சொல்லலாம். சிலசமயம் இன்புளூவின்சா, நிமோனியா, தட்டம்மை, கக்குவான் போன்ற தொற்றுகள் ஈளை நோய் வரக் காரணமாக அமையும். முதியவர்களுக்கு ஈளை நோயுடன் தொற்று இருப்பின் இளைப்பு மிக அதிகமாக ஏற்படும்.

ஈளைநோயை உண்டாக்கவல்ல அலர்ஜி என்ற ஒவ்வாமை யானது, வீட்டுத்தூசி, மலர்களின் மகரந்தம், காளான், புல், நாய், ஆடுமாடுகளின் முடி, கோழிகளின் இறக்கைகள், அழகு சாதனங்கள், பூச்சி கொல்லி மருந்துகள் முதலிய பொருள்களால் உண்டாகும். கோதுமை, முட்டை, சாக்லேட், மாடு மற்றும் பன்றி, இறைச்சி, மீன், நண்டு போன்ற உணவுப்பொருள்களும் ஒவ்வாமையுடன் ஈளை நோயை உண்டாக்கும். மேலே கூறப்பட்ட பொருள்கள் சில உதாரணங்கள் தான். இவைகளைத் தவிர எத்தனையோ பொருள்கள் ஒவ்வாமையை ஏற்படுத்தக் கூடியவைகளாக உள்ளன.

நாகரிகம் வளர வளர இயந்திர வாழ்க்கை அதிகமாகி வருகிறது. தொழிற்கூடங்கள் மிகுதியாகின்றன. இச்சூழ்நிலையில், சுற்றுப்புறத்தில் உள்ள காற்றில் புகை, தூசு முதலிய மாசு படிந்து விடுகிறது. இவற்றுடன் மக்கள் பெருக்கம், தூய்மையற்ற நீர், உணவு முதலியவைகளும் சூழ்நிலையைக் கெடுத்து விடுகின்றன. இவைகளெல்லாம் ஈளை நோய் ஏற்படக் காரணமாக அமையா விட்டாலும், நோய் ஏற்பட்ட நிலையில் அறிகுறிகளை விரைவில் அதிகமாக்கி விடுகின்றன.

குளிர், புகையுடன் கூடிய இடம் முதலியவைகளினாலும் வாய்ப்புள்ளவர்களுக்கு இந்நோய் அறிகுறிகள் ஏற்படுத்தும்,

ஈளை நோய்க்கான அறிகுறிகள்

நோய் தோன்றும் நிலையில் மனத்தில் ஒரு பய உணர்ச்சி தோன்றும். சிலருக்கு மார்பில் பிடிப்பு ஏற்படும். இரவிலேயே மிக அதிகமாக அறிகுறிகள் தோன்றுவதால் தூக்கம் கலைந்து படுக்கை யிலிருந்து எழுந்து நாற்காலியில் உட்கார்ந்து தலை சாய்த்து திணறிய நிலையில் மூச்சுவிடுவது, பார்ப்பவருக்கு பரிதாபமாக காட்சியளிக்கும். இந்நிலையில் பக்கத்திலுள்ளவருக்கு கூட நோயாளி மூச்சு விடும் சத்தம் ''கொய்'' ''கொய்'' என்று கேட்கும். இந்நிலை ஏற்படக் காரணம் நெஞ்சிலிருந்து காற்று வேகத்துடன் சுருங்கிய மூச்சுக் கிளைக்குழாய்களில் வெளிவருவதுதான்.

இளைப்பின் தொடர்ச்சியாக இருமலுடன் பிசின் போன்ற கோழை யுடன் சளியும் குறைந்த அளவில் வெளிவரும். இவ்வறிகுறிகள் தோன்றிய நிலையில் நோயாளிகள் சிடுசிடுப்புடன் கண்கலங்கிய நிலையில் காணப்படுவார்கள்.

ஈளை நோய் சிகிச்சைச் சிக்கலானது. அது இரண்டு கட்டங் களைக் கொண்டது. முதலாவது மூச்சுத்திணறலை நிறுத்துவதும் இரண்டாவது நோயின் தாக்குதல் நேராதபடி தடுப்பதும் ஆகும். ஆனால், பூரணமாக குணப்படுத்தும் சிறந்த மருந்துகள் எந்த மருத்துவத்திலும் இல்லை. தற்காலிக நிவாரணம் அளிக்கும் மருந்துகளே இன்று நம்மிடையே உள்ளன. ஆகவே இந்நோய் வரக் காரணக் கூறுகளிலிருந்து நம்மை காப்பாற்றிக் கொள்வதே கிறந்ததாகும்.

தூய்மையான காற்றுவீசும் பகுதியில் வாழ்வது நல்லது. வீடு சுத்தமாக இருப்பதும் உடலுக்கு உகந்த உணவும், உணவில் ஊட்ட வளமும் அவசியமானது. ஒவ்வாமையை ஏற்படுத்தும் பொருள்களை அறிந்து அவைகளிலிருந்து ஒதுங்கி வாழ வேண்டும். இவைகளைத் தவிர சுவாச உறுப்புகளுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டும். இப்பயிற்சியில் ''பிராணாயாமம்'' என்ற யோகாசனம் நோயால் வாடுபவர்களுக்கு உதவும், மேலும், நீந்துவதும் இவர் களுக்குச்சிறந்தது. மலைப்பிரதேசங்களிலும் கடலோரப் பகுதிகளுக்கு இந்நோயாளிகள் சென்றால் குணம் கிடைக்கிறது. இதே போல் வறட்சியும் வெப்பமும் நிறைந்த பருவ நிலை சில இளைப்பு நோயாளிகளுக்கு இதமாக உள்ளது.

ஆரம்பத்தில் இளைப்பு ஏற்பட்ட நிலையில் ஈளை நோய் தான் என்று மருத்துவர் மூலம் அறிந்து இருதய நோயை வேறுபடுத்தி மருத்துவம் செய்து கொள்ளவேண்டும் ஏனெனில் மருத்துவம் இரண்டிற்கும் வேறுபட்டது. மேலும் மருந்து மாற்றி உட்கொள்வது சில சமயம் மிக ஆபத்தாகவும் முடியும்.

முத்தி நெறி

டாக்டர். மொ. அ. துரை அரங்கசாமி, எம் ஏ., எம்.ஓ. எல்., பிஎச். டி

வீடு

முத்தி ஆவது வீடு. வீடு அடைவதற்குரிய நெறி, அல்லது வழியே முக்தி நெறி ஆம்.

முத்தி நெறி அறியாதவர்களை மூர்க்கர் எனத்தேனினும் இனிய திருவாசகத்தை அருளிய மணிவாசகப் பெருமானார் கூறுகின்றார். மூர்க்கர் என்றால் மூடர் என்பது பொருள். மற்றவர் தம்மை மூடர் என்று அழைக்க எவரேனும் உடன்படுவரோ? உடன்படார். எனின், மக்களாகப் பிறந்தவர்களுள், ஒவ்வொருவரும் முத்தி நெறியைப் பற்றி அறிய வேண்டுவது இன்றியமையாதது அன்றோ? அவ்வாறு அறிய விரும்புபவரே மக்கள். மற்றவர், மக்களுடம்பு உடையவராயினும் மக்களல்லர்; கயவரே, கயவர் யார்?

"கடவுள் ஏது? வினை ஏது? அதனால் விளையும் பயன் ஏது? அந்த வினையின் பயனை அடையும் பசு – ஏது? வினைப்பயனைப் பசுவினிடம் கொண்டு வந்து பிணிக்கின்ற பாசம் ஏது? அந்தப் பிணிப்பு அல்லது கட்டிலிருந்து விடுபட்டு மறுபடியும் கட்டுண்ணாமல் விடுதலை பெற்று நிற்கும் முத்திநிலை ஏது? இவை எல்லாம் உண்டு என நினைப்பிக்கும் கடவுள் அருள் ஏது? தீவினையின் பயனாகிய பாவம் ஏது? நல்வினையின் பயனாகிய புண்ணியம் ஏது? கடவுளை வேண்டிப் பெறுகின்ற வரம் ஏது? தன் முயற்சியால், விரும்புவதைப் பெறுவதற்கு உரிய உபாயமாகிய தவம் ஏது? 'இன்னது செய்வேன்; இன்னது செய்யாது விடுவேன்' என்று வரையறை செய்துகொண்டு, 'செய்வேன்' என்றதைத் தவறாது செய்வதும், 'செய்யேன்' என்றதை, மறந்தும் செய்யாது விடுவதும் ஆகிய விரதம் ஏது? இவற்றுள் யாதொன்றும் நம்புவதற்குரிய பொருள் அன்று. "மனம் விரும்பும் உணவு உண்ண வேண்டும். நல்ல ஆடை அணிய வேண்டும். இளமங்கையர்களை நாடி, அவர்களோடு கூடிக் குலாவ வேண்டும். அவ்வாறு அவர்களோடு கலந்து மகிழ்கின்ற இன்பமே கண்கண்ட இன்பம்; அதுவே கைகண்ட பயன்; என்று பேசுவோர் மக்களுள் பெரும்பான்மையோர். இவ்வாறு பேசும் மக்கள் நாட்டுக்கு நன்மை செய்வதாகத் தம்மை விளம்பரப் படுத்திக் கொள்கின்றனர். இத்தகைய மக்கள் முற்காலத்தும் இருந்தனர். இன்றும் இருக்கின்றனர்; இன்றிருப்பதுபோல், இனிவரும் காலத்தும்

இருப்பர். இப்படிப்பட்டவரை இராமலிங்க அடிகளார் கயவர் என்று அழைக்கின்றனர். கயவர் என்றால் கீழ்மக்கள் என்பது பொருள்.

"மக்கள் உடம்பு எடுத்தவர்கள் அனைவரும் மக்கள் ஆகார். மக்கட்பண்பு உடையவர்களே மக்கள். மற்றவர் கயவர்". இவ்வாறு மக்கள் உடம்பு எடுத்தவர்களை, மக்கள் அல்லது உயர்ந்தோர் எனவும். கயவர் அல்லது இழிந்தோர் எனவும், திருவள்ளுவர் இரு திறத்தவராக வகைப்படுத்தியிருக்கின்றனர். மக்களைப்போலவே, கயவரும் ஒத்த உடம்பு பெற்றுள்ளனர். பசு வேறு புலி வேறு என்பதை அவற்றின் உடம்பு வேறுபட்டால் அறிகிறோம். அத்தகைய வேறுபாடு மக்கள் கயவர் என்பவரிடத்தில் இல்லாதது குறித்து வள்ளுவர் அங்கலாய்க்கிறார். மக்கள் உடம்பு எடுத்தவர்களுள் உயர்வாகிய வகுப்பைச்சார்ந்தவர் என்று சொல்லப் பெறுபவர் மக்கள் என்று சுட்டுவதற்கு உரிய மக்கட்பண்பு உடையவர்களே என்றும், அல்லாதவர் மற்ற அஃறிணைப் பொருள்களோடு சேர்த்து வழங்குதற்கே உரியவர் என்றும் ஆசிரியர் தொல்காப்பியர் கூறுகின்றார்.

எனவே, மக்களுடம்பு எடுத்தவர்களுள்ளும், அறிவுடையவர்களே மக்கள் என்பதும், அந்த அறிவும் முத்திநெறி அறியும் அறிவாக இருத்தல் வேண்டும் என்பதும், அவ்வறிவு இல்லாதவர் மூர்க்கர் எனவும், கயவர் எனவும் அஃறிணைப் பொருள் எனவும் வழங்குதற்கு உரியர் என்பதும் தெளிவாகும்.

முத்திநெறிக்கு உரியவர் :

மக்களுடம்பு எடுத்தவர்கள் யாவரும் முத்திநெறி அறிந்து, அந்நெறியே செல்லக் கருதாதற்கு அடிப்படை யாது ?

மக்களுடம்பு எடுத்தவர்கள், கொடுத்தல், நடத்தல் செய்வதற்கு முறையே கையும் காலும் ஆகிய புறக்கருவிகளைப் பெற்றிருத்தல் போல, நினைத்தல், விசாரித்து அறிதல், தன்போல இலை என்று செருக்குதல், ஆராய்ந்தறிந்ததைப்பழகித் தெளிதல் செய்வதற்கு முறையே மனம், புத்தி, அகங்காரம், சித்தம் ஆகிய அகக்கருவிகளைப் பெற்றிருக்கின்றார்கள். நான்காகத் தொழிற்படும் இவற்றை ஒன்றாகச் சேர்த்து உட்கருவி என்று ஆன்றோர்கூறுவர். உட்கருவியை அந்தக்கரணம் என்று வடநூலார் வழங்குவர்.

ஒவ்வோர் உயிரும் ஒவ்வோர் உடம்பையே பெற்றிலங்குகின்றது என்பது பொதுவாக அனைவரும் அறிந்த செய்தியாகும். ஆனால் உண்மையில் ஒவ்வோர் உயிரும் மும்மூன்று உடம்புகளை

உடையதாகும். மூன்று உடம்புகளைத்தான் பெற்றிருத்தலை, மக்களுடம்பு பெற்ற உயிர் அறிதல், இன்றியமையாததாகும்.

அந்த மூன்று உடம்புகள் யாவை? அவை, பருவுடம்பு, நுண்ணுடம்பு கருவுடம்பு என்பனவாம். வடமொழியில் இவை, முறையே ஸ்தூல சரீரம், சூஷ்ம சரீரம், காரண சரீரம் என்று வழங்கப்படும்.

அவற்றுள், யாவரும் தம் ஊனக் கண்களால் தம் எதிரே பார்த்தற்கு உரிய இறைச்சி வடிவமான வெளியுடலே பருவுடல் எனப்படும். அதற்குள்ளே, உட்கருவி எனப்படும் அந்தக் கரணமும், அறிகருவிகள் எனப்படும் ஞானேந்திரியங்களும், தொழிற்கருவிகள் எனப்படும் கர்மேந்திரியங்களும், உள்வளிகள் எனப்படும் பிராணபஞ்சகமும் கூடின கூட்டமே நுண்ணுடல் எனப் படும். இரசோ குணமாகிய அவித்தியாவுடலே கருவுடல் எனப்படும்.

இவற்றுள், நுண்ணுடலில் உள்ள உட்கருவி எனப்படும் அந்தக் கரணம் சிறப்புடையதாகும். பிறப்புத்தோறும் உயிர் செய்யும் வினைப்பயனின் பதிவுகள் அவித்தையின் காரியமாகிய அதில்தான் ஏற்பட்டிருக்கும். அந்தப் பதிவுகளின் பயனாகவே அடுத்த பிறப்புக் களும், எண்ணங்களும், அவற்றின் செயல்களும் தோன்றும். எனவே, பிறப்பிற்கும் இறப்பிற்கும் அடிப்படையானது உட்கருவி யேயாகும்.

அந்த உட்கருவியில் மலம், விட்சேபம், ஆவரணம் என்ற மூன்று குற்றங்கள் உண்டு. இந்த மூன்று குற்றங்களும் உடையவர் முத்தி நெறி அறிந்து அந்நெறியே செல்லுதற்கு எண்ணங்கொள்ளார்.

இந்த மூன்று குற்றங்களுள், மற்றவர்க்குப் பயன்படும் தன்னலமற்ற செயல்கள் செய்தலால், உட்கருவியில் செம்பிற் களிம்புபோல் கலந்துகிடக்கும் மலம் என்ற குற்றம் நீங்கும்; கடவுளை நினைத்து வாழ்த்தி வணங்கும் வழிபாட்டால் விட்சேபம் என்னும் (மன) அலைச்சலாகிய குற்றம் நீங்கும். ஆவரணம் என்பது அறியாமை. இஃது அறிவு நூற்களைப் பயின்று, பயின்ற வண்ணம் நிற்றலால் நீங்கும். முக்குற்றமும் நீங்கப்பெற்ற அந்தக் கரணமே முத்தியை அடைவிக்கும் கருவியாகும். எனவே, குற்றமுள்ள அந்தக் கரணம் பிறப்பிறப்பிற்கும், குற்றமற்ற அந்தக் கரணம் வீட்டிற்கும் கருவியாகும்.

தன்னலமற்ற செயல்களால் மலம் நீங்கப்பெற்றும், கடவுள் வழிபாட்டால் மன அலைச்சல் நீங்கப்பெற்றும் நிற்பவர் எஞ்சிய

அறியாமை நீங்கப்பெறுவதற்கு உறுகருவியான அறிவுநூல்களைப் பயின்று பயின்ற வண்ணம் நிற்க முன்வருவர். எனவே, அறிவு நூல்கள் எனப்படும் வேதாந்த சாஸ்திரங்களைப் பயிலுதற்குத் தகுதியுடையவர், மலமும், மன அலைச்சலும் நீங்கப்பெற்று அறியாமை மட்டும் எஞ்சி நிற்கபபெற்றவர் என்பது தெளிவாம்.

மலமும் விட்சேபமும் ஏற்கெனவே நீங்கப்பெற்றவர், எஞ்சிய அறியாமையும் நீங்கப்பெறுவதற்குப் பாடுபட முந்துவர். அறிவு நூல்களைப் பயின்று, பயின்ற வண்ணம் நிற்றலால் அறியாமை நீங்கப்பெறுவ ராதலின் அறிவு நூல்களைப் பயிலவும், பயின்ற வண்ணம் நிற்கவும் அவர் பாடுபடுவர். மேலும், பின்வரும் நான்கு சாதனங்களும் அவர்கட்கு இன்றியமையாதனவாகும். எனவே, மலவிட்சேபம் நீங்கப்பெற்று ஆவரணம் மட்டும் உடையவராய் அது நீங்கப்பெற அறிவு நூற் பயிற்சியும் நான்கு சாதனங்களும் உடையவரே முத்திநெறிக்கு உரியவராவர் எனலாம்.

நான்கு சாதனங்கள்

முத்தி நெறி செல்லத் தகுதியுடைமை பெறுதற்கு உரிய சாதனங்கள் நான்கு ஆகும். அவை விவேகம், வைராக்கியப், சமாதி-ஷட்க சம்பத்தி, முமுட்சுத்துவம் என்பனவாகும். சாதனம் எனினும் கருவி எனினும் ஒக்கும்.

விவேகம் :

விவேகம் ஆவது வேறு பிரித்து உணரும் உணர்வாகும். ஒரு காலத்திலும் அழிவுபடாத பொருள் இன்னது, ஒரு காலத்தில் இருந்து மற்றொரு காலத்தில் அழிவுபடும் பொருள் இன்னது என்று வேறு பிரித்து உணரும் உணர்வே விவேகம் என்று சிறப்பித்துக் கூறப்படும். உயிர் ஒரு காலத்திலும் அழிவுபடாத பொருள் என்றும், அதற்கு வேறான எல்லாப் பொருள்களும் ஒரு காலத்தில் இருந்து மற்றொரு காலத்தில் அழிவுபடும் பொருள்கள் என்றும் வேறு பிரித்து உணரும் உணர்வே விவேகம் என்க.

வைராக்கியம்

வைராக்கியம் ஆவது ஆசையின்மை அல்லது பற்றின்மை ஆகும்.

படைத்தலுக்கு முன்னும், அழித்தலுக்குப் பின்னும் இல்லாது, படைத்தலுக்குப் பின்னும் அழித்தலுக்கு முன்னும் இருப்பன இவ் வுலகமும் மேல் உலகங்களும் ஆம். அவற்றில், அவனவன் ஆற்றிய வினைக்கு ஈடாகவே நுகர்ச்சிகள் (போகங்கள்) கிடைப்பனவாகும்.

உலகங்களோ, ஒருகாலத்தில் இருந்து மற்றொரு காலத்தில் இல்லாதுபோவனவாகிய நிலையில்லாமையை உடையன ஆதலால், அவற்றில் வரும் நுகர்ச்சிகளும் நிலையில்லாதனவாகும் என்பது சொல்லாமலே பெறப்படும். நிலையில்லாத பொருள்களிலிருந்து நிலையான இன்பம் ஒருநாளும் பெறவே முடியாது. அவ்வாறு நிலையான இன்பம் பெறலாம் என்று நினைப்பவன். "மண்* குதிரையை நம்பி ஆற்றில் 'இறங்கினவன்'' நிலையையே எய்துவான். ஈண்டுக் குதிரை என்றது, நிலத்தை கடத்தற்கு ஏறிச் செல்வதற்கு உதவும் விலங்காகிய குதிரையைப் போன்று, ஆற்றைக் கடந்து செல்வதற்கு உதவும் படகு ஆகும். எவரேனும் மண்ணினால் ஆகிய படகை நம்பி ஆற்றில் இறங்குவரோ! மண், ஆற்றுநீரில் கரைந்து போகும் என்ற உணர்வு இல்லாதவர், 'படகு மரத்தால் ஆனால் என், மண்ணால் ஆனால் என்?' என்று சொற்போர் தொடுத்துப்படகு என்பது ஆற்றைக் கடப்பதற்கு உதவியாகும் கருவி என்ற ஒரு கருத்து மட்டுமே கொண்டு, அதுகொண்டு ஆற்றில் இறங்கிவிடுவர். மண், ஆற்றுநீரில் கரைந்து போகும் என்ற உணர்வு உடையார், ஒருபோதும் அதுகொண்டு, ஆற்றில் இறங்கவே மாட்டார். உலகு நிலையில்லாதது, அதுகொண்டு நிலையான இன்பம் எய்த நினைத்தலாகாது என்று கூறினால், உண்மை உணர்வு சிறிதும் இல்லாதவர் அது கேட்டு எள்ளி நகையாடுவர். அவர், தம் அறியாமையின் இயல்பு இருந்தவற்றை உணரார் ஆதலின், அவர் நகை, உணர்வு கெட்ட பயித்தியக்காரர் நகைக்கு ஒப்பாவதாம் என்று ஓர்ந்து, அவரைப் பொருட்படுத்தாது, விட்டு நீங்குதலே அறிவுடையோர் செய்யத் தக்கதாகும்.

மேலும் நுகர்ச்சியானது, அவனவன் செய்த வினைக்கு ஈடாகவே வருவதாகும். தினை விதைத்தவன் தினையைத்தான் அறுத்துப் பயன்பெற முடியும். தினை விதைத்தவன் நெல் அறுத்து, அதனால் ஆம் பயன் பெற முடியாது. அதுபோல, வினையை விதைத்தவன், தான் விதைத்த வினையை அறுத்து அதனால் ஆம் பயனைத்தான் பெறமுடியும்.

சமூகத்தின் குற்றமே, தனிமனிதன், தான் விரும்பும் நுகர்ச்சியைப் பெறாமைக்கு அடிப்படையாம் என்று இக்

---

*ஆற்று நீரின் நடுவில் தோன்றும் மண்திடல் 'குதிர்' எனப்படும் என்றும் அக் குதிரை நம்பி ஆற்றில் இறங்கினால், நீருள் அழுந்திவிடுவர் என்றும், எனவே அக் குதிரை நம்பி இறங்கலாகாதென்றும், 'குதிரை' நம்பி என்பதே பொருளுணர்ச்சி இல்லாதவரால், 'குதிரையை' நம்பி என்று கொள்ளப்பட்டதென்றும் கூறுவாறும் உளர், 'குதிர்' என்பதற்கு 'மண்திடல்' என்ற பொருள் பல்கலைக்கழக அகராதியில் இல்லை என்பதும் கருதத்தக்கது.

காலத்தவருள் சிலர் சொற்போர் தொடுப்பர். தனிமனிதர் கூட்டமே சமூகம் எனப்படும். தனிப்பட்ட ஒவ்வொருவனும் சமூகத்தின் குற்றங்களுக்கு அடிப்படையாம். எனவே, சமூகத்தின் குற்றம் தனித்தனி மனிதனின் குற்றமாகவே முடியும். ஆதலால், சமூக ஊழல், சமூக ஊழல் என்று வாய்ப்பறை அறைவோர், சமூகம் இன்னது என்பதன் உண்மைப் பொருளை அறியாதவரே ஆவர்.

முற்காலத்தில், ஒரு சமூகத்தில், ஏழை பணக்காரர் என்ற வேற்றுமை ஏற்பட்டதற்கு அடிப்படை, அச்சமூகத்தில் இருந்த ஒவ்வொரு தனிமனிதனும் அவ்வேற்றுமைக்கு உடன்பட்டமையே ஆகும். இக்காலத்தில் அவ்வேற்றுமை ஒழிய வேண்டுமாயின், ஒவ்வொரு மனிதனும் அவ்வேறுபாடு இருத்தல் ஆகாது என்று உடன்பட்டு அதனை ஒழிக்க உழைக்கவேண்டும். எனவே, எவ்வாறு எண்ணினாலும் அவனவன் ஆற்றிய வினைக்கு ஈடாகவே அவனவன் நுகர்ச்சி பெறுவான் என்ற முடிவிற்குத்தான் வந்தாக வேண்டும். எவ்வளவுதான் பாடுபட்டுத் தேடி உணவுப் பொருளை எல்லையில்லாமல் ஈட்டி வைத்துக்கொண்டு உண்ணத் தலைப் பட்டாலும், அவ்வாறு உண்ணும் பேறு நிலைத்து நிற்பதில்லை என்பது வரலாற்று உண்மையும் ஆகும்.

"காணப்படும் இவ்வுலகமும், கேட்கப்படும் மேல் உலகங்களும் நிலையில்லாதவை. அவனவன் ஆற்றிய வினைக்கு ஈடாகவே நுகர்ச்சி கிடைப்பதாகும்" என்ற துணிவு கொண்டு, உலகங்க ளிடத்தும், நுகாச்சியிடத்தும் பற்று இல்லாதிருத்தலே வைராக்கியம் எனப்படும்.

பற்று இல்லாதிருத்தல் என்றால், மனைவி மக்களை விடுத்துக் காட்டிற்கோ, மலைக்கோ சென்று, கடுந்தவம் செய்வது என்றும், சோம்பேறித்தனம் கொள்வது என்றும் பிறழ் பொருள் கொள்ளுவர் அறியார். உடலுறுப்புப் பெற்றவர்கள் அவற்றைக்கொண்டு உழைக்கவே வேண்டும். அவ்வாறு உழைக்குங்கால் தாமே நுகர்ச்சி பெறல் வேண்டும் என்ற குறுகிய நோக்கம் கொள்ளாது மற்றவரும் நுகர்ச்சி பெறல் வேண்டும் என்ற பரந்த நோக்கம் கொள்ளுதல் வேண்டும். எனவே, தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாய் ஒருவன் தொண்டு ஆற்றுதலே, உண்மையில் வைராக்கியம் அல்லது பற்றற்ற தன்மை எனப்படும். நுண்ணூல்கள் எல்லாம், இவ்வுலக அவ்வுலகங்களில் பற்றுக் கொள்ளலாகாது என்று கூறாமல், அவற்றில் வரும் நுகர்ச்சிகளில் பற்றுக் கொள்ளலாகாது என்று கூறியிருத்தலைக் கூர்ந்து கருதுதல் வேண்டும். இதனையே, இகாமுத்திரார்த்த பலபோக விராகம் என்று வடமொழியாளர்

கூறுவர். இகம் என்றால் இவ்வுலகம்; அமுத்திரம் என்றால் அவ்வுலகம்; அஃதாவது மேலுலகம். அர்த்தம் என்றால் பொருள். பலம் என்றால் பயன். போகம் என்றால் நுகர்ச்சி. விராகம் என்றால் ஆசையின்மை-பற்றுக் கொள்ளாமை. எனவே, இவ்வுலகப் பொருள்களிலும், மேலுலகப் பொருள்களிலும் வரும்பயன் ஆகிய நுகர்ச்சியில் பற்று வைக்காமல், 'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்று கொண்டு, தொண்டாற்றுவதே உண்மை வைராக்கியம் அல்லது பற்றின்மை எனப்படும். இவ்வகை உணர்வுடன் பணி ஆற்றுபவரே இன்ப துன்பங்களால், முறையே, மகிழ்ச்சியும் வருத்தமும் அடையாமல், என்றும் ஒரே நிலையில் உள்ளம் நிலைத்து நிற்கப்பேரின்பம் எனப்படும் முத்தியை அடைதற்கு உரிய நெறியில் செல்லுவதற்கு உரியவர் ஆவர்.

விவேகம் ஒன்றுமே உடையார்க்கு, நிலையான பொருள் இன்னது, அல்லாத பொருள் இன்னது என்ற அறிவு மட்டுமே ஏற்படும். வைராக்கியம் எனப்படும் பற்றின்மையொடு தொண் டாற்றுவார்க்கே, அவை உண்மை அநுபவம் ஆகும். எனவே, விவேகம் உடையார், அடுத்து வைராக்கியமும், அதனை அடுத்து மற்றைய சாதனங்களும் பெறுதல் இன்றியமையாததாகும்.

சமாதி ஷட்க சம்பத்தி

முத்தி நெறி செல்லத் தகுதியுடைமை பெறுதற்கு உரிய மூன்றாம் சாதனம் அல்லது கருவி ஆறுவகையாகப் பாகுபட்டு நிற்கும். அவற்றை ஆறு வேறு வேறான கருவிகளாகக் கொள்ளாது ஒன்றாகக் கொள்ளுதலே மரபாகும்; அங்ஙனம் கொள்ளுதலே பொருத்தமும் ஆகும். ஏனெனில், ஆறும் ஒரு விசிப்பலகையின் ஆறுகால்கள் போன்று ஒன்றற்கு ஒன்று சார்பானவையாகும்.

அவற்றுள் சமம் என்பது, அந்தக்கரணம் என்னும் அகக் கருவியை, அதன் இச்சைப்படி வெளியில் சென்று உலகப்பொருள் களில் அழுந்தாதவாறு தடுத்தல் அல்லது மடக்கி நிறுத்துதல் ஆகும். 'சமம் அகக்கரண தண்டம்', என்பது கைவல்ய நவநீதம். அவ்வாறு அதைத் தடுத்தல் வேண்டும் என்பதால், அதனை எந்தப் பொருளையும் பற்றி எண்ணவிடாமல் தடுத்துச் சோம்பி இருக்கச் செய்தல் வேண்டும் என்பது கருத்தன்று. எந்தப் பொருளையும் எண்ணாமல் சும்மா இருத்தல் என்பது அகக்கருவியின் இயற்கையும் அன்று. நிலையில் பொருள்களையே எண்ணும் இயல்பு வாய்ந்த அகக்கருவியை. அவற்றை எண்ணவிடாது, நிலையான உயிரையும் ஆன்மாவையும் அதன் உண்மை இயல்புகளையும் எண்ணுமாறு

செய்தலே அகக்கருவியைத் தடுத்தல் என்பதன் உண்மைப் பொருள் ஆகும்; பிற பொருள்களை எண்ணுமாறு விடாமல், இறைவன் இயல்புகளை எண்ணுமாறு செய்தலும் சமம் என்றே கருதப்படும்.

அகக்கருவி என்பது யாது? உடலுக்கு வெளியே இருக்கும் செவி, கண், மூக்கு, வாய், மெய் என்பவை புறக்கருவி என்று என்று வழக்கப்படுதல் போல, உடலுக்கு உள்ளே இருக்கும் உள்ளம் அகக்கருவி என்று வழங்கப்படும். ஆனால், தொழில் வேறுபாட்டினால் இந்த அகக்கருவி நான்கு வகையாகத் திரிபு பெறுவதாக வழங்கப்படும் திரிபைப் பரிணாமம் என வடநூலார் வழங்குவர். ஒன்றை நினைத்தலும் மறத்தலும் செய்யும்போது, அது மனம் என்று வழங்கப்படும்; நினைக்கப்பட்ட அது நலம் பயப்பதோ, பொலம் (தீது) பயப்பதோ என்று ஆராயும்போது, அது புத்தி எனப்படும்; அது நலம் பயப்பது என்றோ, பொலம் (தீது) பயப்பது என்றோ, ஏதோ ஒரு வகையான முடிவு செய்தற்குக் கருவியாகும் போது அது சித்தம் எனபபடும், 'இவ்வாறு முடிவு செய்தேன் நான்' என்று செருக்குடன் கருதுவதற்குக் கருவியாகும் போது அஃது அகங்காரம் எனப்படும். எனவே, அகக்கருவியான உள்ளம், அது செய்யும் தொழிலாகிய அடிப்படையைக் கொண்டு இவ்வாறு மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என நான்கு வகைத்திரிபுகள் பெறுவதாக வழங்கப்படும். திரிபுகளைக் கருதாதபோது உள்ளத்தை அகக்கருவி எனப்பொதுவாகவே வழங்குவர். அகக்கருவி, அகக்கரணம், அந்தக்கரணம், உள்ளம் என்பன ஒரே பொருளை உணர்த்துவன ஆகும்.

தமம் என்பது புறக்கருவிகளை, அவை நாடிநிற்கும் பொருள்களில் செல்லாதவாறு தடுத்தல் ஆகும். 'தமம் புறக்கரண தண்டம்' என்பது கைவல்யம். செவி, கண், மூக்கு, வாய், மெய், என்பன புறக்கருவிகள் எனப்படும். செவியின் இயல்பு, ஒலியை நாடி நிற்பதாகும்; கண்ணின் இயல்பு, நிறத்தை நாடிநிற்பதாகும்; மூக்கின் இயல்பு மணத்தை நாடி நிற்பதாகும்; வாயின் இயல்பு, சுவையை நாடி நிற்பதாகும். மெய்யின் இயல்பு ஊற்றினை (ஸ்பரிசத்தை) நாடி நிற்பதாகும். எனவே, செவி முதலியவற்றை, ஒலி முதலியவற்றை நாடிநின்று, அவற்றில் பற்றுக்கொண்டு, அழுந்தி விடாதவாறு தடுத்து நிறுத்தலே தமம் என்னும் அகக்கரண தண்டம் ஆகும்.

புறக்கருவிகளைத் தடுத்தல் என்றால், ஒலியைக்கேளாதவாறு செவியைப் பஞ்சடைத்து மூடிவிடுதல், மணத்தை மோவாதவாறு (முகராதவாறு) மூக்கைக் கைவிரல்களால் இறுகப்பற்றிக் கொள்ளுதல், நிறத்தைக்காணாதவாறு கண்ணை மூடிவிடுதல். சுவையை உணராதவாறு வாயிதழ்களை ஊசி நூல்கொண்டு

தைத்து விடுதல். ஸ்பரிசத்தை (ஊற்றினை) உணராதவாறு மெய்யை வைக்கோல் புரி சுற்றித் தடுத்து விடுதல் என்று கொள்ளுதல் ஆகாது. அவ்வாறு கொள்வோர் எவரேனும் உள ரானால், அவரை அறிவுடையவர் என்று உலகம் கொள்ளாது.

செவி, ஒலியைக் கேட்கத்தான் வேண்டும். அதுதான் செவி பெற்றதனால் பெறும் பயன் ஆகும். அதனைப் பஞ்சடைத்து மூடி விடுதல், பெற்ற பொருளைப் பயன்படுத்தாமல் மூடிவைத்துவிட்டுப் பொருள் இல்லையே என்று வருந்துவோர் செயலை ஒப்பதாகும். ஒலியைக் கேட்குமாறு செவியை நன்றாகப் பயன்படுத்தத்தான் வேண்டும். ஆனால் அச்செவி நல்ல இனிமையான இசையை எதிர்பட்டவிடத்து, அதிலேயே தளைப்படுத்தி, நம்மை மேற்சொல்லாதவாறு செய்துவிட அதற்கு இடம் கொடுத்துவிடுதல் ஆகாது. அதனை உடையவன், அச்செவியைத் தன் பிடியில் வைத்துத் தான் ஏவியவாறு கேட்கும்படி செய்தல் வேண்டும். அதுவே தமம் என்பதன் உண்மைக் கருத்தாகும்.

உயிர்போகும் நிலையிலிருக்கும் ஒருவனுக்கு, மருந்து வாங்கிக் கொண்டுவரப் போனவழியில், இசையில் பழகிய செவி, தனக்கு எதிர்ப்பட்ட இசையில் ஈடுபட்டுவிட, அதற்கு அடிமைப்பட்டு, அந்த இசை எதிர்ப்பட்ட இடத்திலேயே நின்று விடுவானானால், மருந்தை உரியகாலத்தில் வாங்கி வருதல் எவ்வாறு இயலும்? உயிரைக் காப்பாற்றுதல் எவ்வாறு இயலும்? அந்நேரத்தில், செவியை இசையில் ஈடுபடாதவாறு தடுத்துத் தன்வழியில் நிற்கவைத்து மேற் செல்லுவதுதானே அறிவுடைமை ஆகும்? அவ்வாறு, அதனைத் தன்வழியில் நிறுத்தி வைப்பதற்கு ஏற்ற பயிற்சி இன்றியமையாதது அன்றோ! அப்பயிற்சியைத்தான் தமம் என்று கூறினர் ஆன்றோர். செவியைத் தடுத்துத் தன்வழியில் வைத்து ஆளுதல் போலவே, ஏனைய புறக்கருவிகளையும் ஒருவன் தன்வழியில் வைத்து ஆளுதல் வேண்டும். இதுவே தமம் என்னும் புறக்கரண தண்டம் ஆகும்.

உபராமம் என்பது விடுதல் என்று பொருள்படும். செய் தொழில்கள் எல்லாவற்றையும் செய்யாது விட்டுவிடுதலே உபராமம் என்பர் ஒரு சாரார். மனைவி, மைந்தர், பொருள், சாதி, இச்சை முதலியவற்றின் காரணமாகவே தொழில்கள் செய்யப்படுகின்றன. ஆதலால், அவற்றை விட்டுவிடுதலே உபராமம் என்பர் மற்றொரு சாரார். புலன்களாகிய விஷயங்கள் விட்டுவிடுதற்கு இயலாதவை ஆதலால், அவை எதிர்ப்பட்டவிடத்து அவற்றை நஞ்சுபோல் கருதி, அவற்றினின்று விலகி ஓடிவிடுவதும், மங்கையர்களைக் கண்ட விடத்து மனத்தில் அருவருப்புக் கொண்டு ஓடிவிடுவதும் உபராமம்

ஆம் என்று கூறுவர் மற்றொரு சாரார். "அமர்தரு கருமம் பற்றாது அடங்கலே விடலென்றாகும்," என்பது கைவல்யம்.

மக்களாகப் பிறந்தவர்கள் தொழில் ஒன்றும் செய்யாமல் ஒரு நொடிப் பொழுதும் விழிப்பு நிலையில் இருத்தல் இயலாது. தொழில் செய்து கொண்டிருத்தல்தான் மக்களியற்கை. கால்கள் நடக்கத்தான் வேண்டும். கண் முதலியனவும் பார்த்தல் முதலிய செயல்களைச் செய்து கொண்டுதான் இருத்தல்வேண்டும். ஒரு தொழிலையும் செய்யாது விட்டுவிடுதல் என்பது ஆகாத செயல். அப்படி செய்யாது விட்டுவிடுதல் என்பது பிணவுடலால்தான் ஆகும். எனவே, பற்றில்லாமல், செய்தொழில்களை ஆற்றுவதே உபராமம் என்று கூறுதல்வேண்டும். பற்றினை விடுதலே உபராமம் ஆம் என்பது இப்போது நன்கு விளங்கும். பொறிகளும், கரணங்களும் தத்தமக்கு உரிய தொழில்களைச் செய்து கொண்டே இருக்க, எந்தப் பொருளிலும் பற்றுக் கொள்ளாதிருத்தலே உபராமம் எனப்படும். ஒரு பயனைக் கருதி ஒரு தொழிலைச் செய்தவிடத்து, அந்தக்கருதிய பயன் எய்தவில்லையெனில், துன்பம் உண்டாகும். பயன் எய்திய விடத்து, இன்பம் உண்டாகும். குறித்த பயனை எய்துவது அருமையாகும். எனவே, "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்று கொண்டு, தொழில் களைச் செய்து கொண்டே இருத்தல் வேண்டும். அவற்றைச் செய்யாது விட்டுவிடுதல் சோம்பேறித்தனம் ஆகும். சோம்பேறித் தனம் கொள்ளவேண்டும் என்று அறிவுடையோர் எவரும் கூறார். சோம்பேறித்தனம் இல்லாது இருத்தல் வேண்டும். சுறுசுறுப்பாய்த் தொழில்களைச் செய்து கொண்டேயிருத்தல் வேண்டும். தொழில் களைச் செய்து கொண்டேயிருத்தலால் உறுப்புக்கள் நோயின்றி நலமாக இருக்கும். தொழில்களைச் செய்யாது விடுதலால் உறுப்புக்கள் நோயினால் துன்பம் உறும். புலன்களை (விஷயங் களை) நஞ்சாகக்கருதி ஓட்டம் பிடிப்பதும், மங்கையர்களைக் காணில், உள்ளத்தின்கண், அருவருப்பு அடைந்து ஓட்டம் பிடிப் பதும் உபராமம் ஆகமாட்டா. எவ்விடத்திற்கு ஓடினாலும் புலன் களோ (விஷயங்களோ) மங்கையரோ இல்லாது போகார். எனவே புலன்களிடத்தும், மங்கையர்களிடத்தும் பற்றுக்கொள்ளுதலின்றித் தொழில்செய்து கொண்டேதான் இருத்தல் வேண்டும். அதுவே இயற்கையும் ஆகும். எனவே நன்மை வரினும் வருக! தீமை வரினும் வருக" என்று கொண்டு, பற்றில்லாமல் மக்களுக்குத் தொண்டாற்றுதலும், இறைவனை வணங்கி வழிபட்டாற்றுதலுமே உபராமம் ஆகும். பற்றின்றித் தொழிலாற்றுதல் உபராமமாம். நுகர்ச்சியிற் பற்றின்மை வைராக்யமாம். இவ்வேறுபாடு அறிக.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

தமிழ்ப் பொழில்

பதிப்பாசிரியர் குழு

1. திரு. ச. இராமநாதன், அவர்கள்
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

2. திரு. கி. சந்திரமோகன், பி. ஏ., பி. எல்., அவர்கள்
செயலாளர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

3. திரு. புலவர் க. வெள்ளைவாரணனார் அவர்கள்
பேராசிரியர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

4. திரு. டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்,
எம். ஏ., எம். லிட்., பி. எச். டி., அவர்கள்
தமிழ்த் துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம்.

5. திரு. டாக்டர் தமிழண்ணல், எம். ஏ., பி. எச். டி., அவர்கள்
தமிழ்ப் பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

6 திரு. சிலம்பொலி சு. செல்லப்பன், எம். ஏ., அவர்கள்
தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர், சென்னை.

7. திரு. புலவர் பீ. விருத்தாசலம், எம். ஏ., அவர்கள்
முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2.

8. திரு. பேராசிரியர், புலவர் ச. பாலசுந்தரம் அவர்கள்
367, மேல அரச வீதி, தஞ்சாவூர்.

9. திரு. புலவர் சி. கோவிந்தராசனார் அவர்கள்
பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

10. திரு. புலவர் மீனா. இராமதாசு, எம். ஏ., அவர்கள்
உமாமகேசுவரா மேல் நிலைப்பள்ளி, தஞ்சாவூர்-2.

தமிழ்த்தாய் வாழ்க

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தமிழ்ப் பொழிலின் கையொப்பம்

			உள் நாடு		வெளி நாடு
1.	ஆண்டு வரி	...	20—00	...	030—00
2.	தனி இதழ்	...	02—00		
3.	ஆயுள் வரி	...	250—00	...	250—00

—: சங்க உறுப்பினர்கள் :—

திங்கள் வரி	...	000—25
ஆண்டு வரி	...	003—00
ஆயுள் வரி	—	100—00